Registered as a Newspaper — பக்கங்கள் 6 — விலை ரூபா 5=00

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

# ஈழநாதம்

The Eelanaatham — மக்கள் தினசரி — Peoples Daily

நாதம் 5 — திருவள்ளுவர் ஆண்டு 2025 — வைகாசி 15 — 29 - 05 - 1994 — ஞாயிற்றுக்கிழமை — ஓசை 100

## குழந்தைகள் இறப்பு வீதம் தென்மராட்சியில் அதிகம்

இந்த ஆண்டின் முதல் காலாண்டு பகுதியில் யாழ்ப்பாண மாவட்டத்தில் எண்பத்தைந்து குழந்தைகள் மரணமடைந்துள்ளதாக யாழ்ப்பாண பிராந்திய சுகாதார அத்தியட்சகர் பிரிவு எடுத்துள்ள புள்ளி விபரமொன்றின் மூலம் தெரியவந்துள்ளது, பிறந்த ஏழு நாட்களுக்குள் மரணமடைந்த குழந்தைகள் ஐம்பத்திநான்கு எனவும், ஏழு தொடக்கம் 28 நாட்களுக்குமிடையில் மரணமடைந்த குழந்தைகள் முப்பத்தியொன்று எனவும், அத் தகவல்கள் மூலம் மேலும் தெரியவருகின்றது, சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஆகக் கூடுதலாக 24 குழந்தைகள் மரணமடைந்ததாகவும், மானிப்பாய்

(6ஆம் பக்கம் பார்க்க)

# சந்திரிகா தலைமையிலேயே இனப்பிரச்சினை தீர்க்கமுடியும்

## அரசியல் அவதானிகள் நம்பிக்கை

(கொழும்பு)

**சிறிலங்காவின் தற்போதைய தலைவர்களில் சந்திரிகா குமாரணதுங்காவே பெரும்பாலானோரின் நம்பிக்கைக்குரிய தலைவர் எனவும், அவரைத் தேர்தலில் வெற்றிபெற வைப்பதன் மூலமே இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியும் எனவும் அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.**

இன்றைய அரசியல் தலைவர்களுக்குள் சந்திரிகா குமாரணதுங்க ஒருவரே சகலதரப்பினரதும் வரவேற்பைப் பெற்றுள்ள தலைவராக விளங்குகிறார். இவரை அரசியலில் மேல் நிலக்கு கொண்டுவர சகல தரப்பினரும் முயல வேண்டும் இவ்வாறு அவரை உயர்நிலைக்கு கொண்டுவந்து ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடச்செய்து அதில் வெற்றிபெறச் செய்வது இன்றைய நிலையில் அவசியமானதாகவுள்ளது. இன்றைக்கு இங்கு நடைபெற்றுக்கொண்டிருக்கும் இனப்பிரச்சினை மிக மோசமான நிலையை அடைந்துள்ளது. இனப்பிரச்சினையால் இன்றைய சமூகம்

(6ஆம் பக்கம் பார்க்க)

## விமான நடமாட்டம் குடாநாடு மீது அதிகரிப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ் குடா நாட்டில் சிறிலங்கா விமானப்படை குண்டு வீச்சு விமானங்களின் நடமாட்டம் நேற்றும் அதிகரித்து காணப்பட்டது.

நேற்று மாலை 6 மணியளவில் புக்காரா விமானம் ஒன்று நீர்வேலிப் பகுதியை மையமாகக் கொண்டு பல தடவைகள் வட்டமிட்டவாறு நோட்டமிட்டுச் சென்றதை அவதானிக்க முடிந்தது.

இதே வேளை நேற்று முன் தினம் இரவு முழுவதும் வலிகாமம் வடக்கு பகுதி நோக்கி பலாலி இராணுவ முகாம் படையினர் பரவலாக எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்ட வண்ணமிருந்தனர். இவற்றில் பெரும்பாலானவைகள் வளலாய் பகுதியிலேயே வீழ்ந்து வெடித்தன. ஆயினும் எதுவித உயிரிழப்புகளும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

## மாணவர் மீது ராகிங்

பல்கலைக்கழக அனுமதியை பெற்று தற்போது சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் கெல்ற் ஆங்கில வகுப்பில் கல்விபயின்றுவரும் மாணவர் மீது வெளி மாணவர்கள் சிலர் ராகிங் மேற்கொள்வதாக பெற்றோர்கள் முறையிட்டுள்ளனர்.

பாடசாலைக்கு அருகில் உள்ள வீதிகளில் இச்செயல்கள் தொடர்வதாக தெரிவிக்கப்படுகிறது. (86)

## புலிகள் - ராணுவம் திடீர் மோதல்; ஆனையிறவில் இரு படையினர் பலி

ஆனையிறவு இராணுவ முகாம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெற்ற மோதலில் இரு படையினர் கொல்லப்பட்டதாகவும் பலர் படுகாயமடைந்ததாகவும் தெரியவருகிறது.

நேற்று முன் தினம் ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து வெளியேறி ரோந்து சென்ற படை அணி மீதே முகாமிற்கு சமீபமாக வைத்து விடுதலைப்புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர். இத் தாக்குதலின் போது படையினரும் எதிர்த் தாக்குதல் நடத்தியதாகவும் இத்தாக்குதலின் போதே இராணுவ தரப்பில் இருவர் பலியானதாகவும் பலர் படுகாயமடைந்ததாகவும் இராணுவ வட்டாரங்களை ஆதாரம் காட்டிவெரித்தாஸ்வானொலி செய்தி வெளியிட்டது

## ஜனாதிபதி தேர்தல் வேட்பாளராக சந்திரிகாவை நியமிக்குமாறு சு. கட்சி தொண்டர்கள் வற்புறுத்து

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பாக தீர்க்கமான முடிவு ஒன்றை கட்சி எடுக்க வேண்டும் என்றும், இது ஓர் பலம் வாய்ந்த வேட்பாளராக அமைய வேண்டும் எனவும் கட்சியின் கீழ்மட்ட உறுப்பினர்கள் தலைமைப்பீடத்திடம் தொடர்ந்து வற்புறுத்திவருவதாக 'ராவய' ஆசிரியர் விக்டர் ஐவன் தெரிவித்துள்ளார்.

சுதந்திர கட்சி ஜனதிபதி வேட்பாளர் சிறிமாவோ பண்டாரநாயக்கா போட்டியிடுவதை அநேகர் விரும்பவில்லை. தனே ஜனாதிபதி வேட்பாளர் என சிறிமாவோ தெரிவிக்க வேண்டிய நிலை தோன்றியுள்ளது. இதனை மக்கள் ஏற்றுக்கொள்வதாக தெரியவில்லை எனவும் தெரிவித்தார்.

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் வெற்றியா? தோல்வியா? என்பதே சூதாட்டமாகக் ருதிக் கொள்வதற்கு

(6ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானம் ஏற்பட ஒத்துழைக்க தயார்

### அமைச்சரிடம் ஐரோப்பிய எம். பிகள்

[கொழும்பு]

இலங்கையில் சமாதானம் ஏற்படுவதற்காக தமது ஒத்துழைப்பை வழங்கத் தயாராக இருப்பதாக ஐரோப்பிய நாடுகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமக்கு உறுதியளித்திருப்பதாக இந்து சமய கலாசார அமைச்சர் பி. பி. தேவராஜ் கூறியுள்ளார்.

சிறிலங்காவின் பாராளுமன்றக் குழுவில் அங்கம் பெற்று ஐரோப்பிய நாடுகளுக்கு அமைச்சர் தேவராஜ் அண்மையில் சென்றிருந்தது தெரிந்ததே.

## ஐ. நா. படையை அரசு அழைக்கவில்லை

### -ரணில் விக்கிரமசிங்கா

(கொழும்பு)

ஐ. நா. படைகள் இலங்கைக்கு வரமாட்டாது, இது தொடர்பாக வேண்டுகோள் எதுவும் அரசினால் விடுக்கப்படவில்லை என பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பூஸாவில் ஆயிரக்கணக்கான கைதிகள் உள்ளதாக அடிக்கடி கூறப்படுகிறது அங்கு தற்போது 136 பேர் உள்ளனர் அவர்களில் ஆறு பேர் மட்டுமே 1987 முதல் தடுத்து வைக்கப்பட்டவர்களாவர். சொத்தி உபாலி என்ற நபர் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவில் எக்காலத்திலும் இருந்ததில்லை எனவும் பிரதமர் ரணில் குறிப்பிட்டார்.

## எமது கட்சிக்குள் பிளவோ அணிகளோ கிடையாது

### பிரேமச்சந்திரா

எமதுகட்சியில் பிளவுகளோ அன்றி அணிகளோகிடையாது நானே கட்சியின் தலைவர் என ஜனநாயக ஐக்கிய முன்னணி கட்சியின் முன்னணி உறுப்பினரான லலித் அத்துலத் முதலியின் பெயரை பயன்படுத்தி கட்சியில் பிளவை

## காமினியின் இடத்திற்கு ரஜசேனநாயக்காநியமனம்

(கொழும்பு)

காமினி திசாநாயக்காவின் ... காமினி திசாநாயக்கா ஐக்கிய தேசியக்கட்சி பாராளு

## மேல் மாகாண சபை ஆசை தவிர்க்க

# மேல் மாகாண சபை அரசை கவிழ்க்க
# ஜ. ஐ. தே. முன்னணி முயற்சி

[கொழும்பு]

மேல் மாகாண சபையின் ஆட்சிப் பொறுப்பை ஐக்கிய தேசியக் கட்சி ஏற்கும் வகையில் ஒத்துழைப்பு வழங்குவதற்கு ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியினர் முயற்சிகள் மேற்கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிமூலம் மேல்மாகாண சபைக்கு தெரிவு செய்யப்பட்ட பதினேழு உறுப்பினர்களையும் நீக்கி விட்டு அவர்களுக்குப் பதிலாக புதிய உறுப்பினர்களை நியமித்து ஐ. தே. க விற்கு ஒத்துழைப்பு வழங்க ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைமைப்பீடம் முயற்சித்துக்கொண்டிருக்கிறது.

104 உறுப்பினர்களைக் கொண்ட மேல் மாகாண சபையில் பொதுசன ஐக்கிய முன்னணிக்கு 45 உறுப்பினர்களும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிக்கு 17 உறுப்பினர்களும் இருப்பது தெரிந்ததே-

# கைத்தொழில் வலயம் என்ற ரீதியில் திருமலையில்பாரியசிங்கள குடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

திருகோணமலை கப்பல் துறைப்பகுதியில் கைத்தொழில்வலயம் என்ற போர்வையின் கீழ் பாரிய சிங்கள குடியேற்றம் ஒன்றை நிறுவுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் மூலம் தெரியவருகிறது அறுநூறு ஏக்கர் நிலப்பரப்பில் சுமார் ஐம்பதாயிரத்துக்கு மேற்பட்டோருக்கு வேலை வாய்ப்பு வழங்கும் உத்தேசத்துடன் ஆரம்பிக்கப்படவுள்ள இத்திட்டத்திற்காக வெளி மாவட்டங்களிலேயே ஆட்சேர்ப்பு நடத்தப்படவுள்ளது என சிறிலங்கா அரசு வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது அத்துடன் இப்பகுதியில் வசிக்கும் தமிழர் குடும்பங்களும் வெளியேற்றப்படவுள்ளன.

ஜனாதிபதியின் சிபார்சுகளின் அடிப்படையில் ஆரம்பிக்கப்படவுள்ள இத்திட்டத்திற்கென ரயில் போக்குவரத்து, தெருவீதிகள், மின்சார வசதிகள், தொலைத் தொடர்பு வசதிகள் என்பவையும் விரிவாக்கப்படவுள்ளன இத்திட்டத்தின் முதல்கட்டத்தில் 2000பேரும், இரண்டாம்கட்டத்தில் 50,000 பேரும் நேரடி வேலைவாய்ப்பு பெறுவர் என்றும் மறைமுகமாக 1,50,000 க்கும் அதிகமானோர் வேலை வாய்ப்பு பெறுவர் என்றும் கூறப்படுகிறது

# கமக்காரர்அடையாள அட்டை
# கொண்டுவர ஏற்பாடு

இரண்டாம் கட்ட ஈழப் போர் ஆரம்பித்த காலத்திலிருந்து தமிழீழத்திற்கு கொண்டு வரப்படும் உள்ளீடுகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே உள்ளது இதனை கருத்தில் கொண்டு அனைத்து விவசாயிகளையும் விவசாயத்தில் ஈடுபடசெய்வதற்காக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் கமக்கார அறிமுக அட்டை நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது இதன்மூலம் தமிழீழத்திற்கு கொண்டுவரப்படும் உள்ளீடுகள் சரியான முறையிலும் சமபங்கீட்டு அடிப்படையிலும் இக் கமக்கார அறிமுக அட்டை மூலம் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

யாழ் மாவட்டத்தில் தற்போது அண்ணளவாக 40,000 விவசாயிகள் உள்ளனர் இவர்

(6ஆம் பக்கம் பார்க்க)

அன்றி அணிகளோ கிடையாது நானே கட்சியின் தலைவர் என ஜனநாயக ஐக்கிய முன்னணியின் தலைவர் ஜீ. எம் பிரேமச்சந்திரா தெரிவித்துள்ளார்

லண்டன் பி. பி. ஸி. சிங்கள சேவையான சந்தேசிய வானொலிக்கு அளித்த பேட்டியில் பின்வருமாறு தெரிவித்

உறுப்பினரான லலித் அத்துலத் முதலியின் பெயரை பயன்படுத்தி கட்சியில் பிளவை ஏற்படுத்த முற்பட்டால் அது லலித் அத்துலத் முதலிக்கு செய்யும் துரோகமாகவே கருதுகின்றேன் லலித்தின் கொள்கை முன்னெடுக்க வேண்டிய உரிமை இருப்பது

(6ஆம் பக்கம் பார்க்க)

**க- பொ- த- உயர்தரப் பரீட்சை;**

# சித்தியடைந்தோர் விபரம் திரட்டப்படுகின்றது

[கொழும்பு]

க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் சித்தியெய்தி தொழிலற்று இருக்கும் இளைஞர்களின் பெயர் விபரங்களை திரட்டும் நடவடிக்கையில் கொள்கைத் திட்டமிடல் அமைச்சின் புள்ளி விபரக் கிளை ஈடுபடும் என்று அமைச்சின் செயலாளர் கலாநிதி விக்கிரம வீரசூரிய தெரிவித்துள்ளார்

அமைச்சில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் பேசிய அவர் மேலும் கூறுகையில்; தொழில்தரவுவங்கி ஒன்றில் இப்பெயர்கள் பதிவு செய்துவைக்கப்படுமென்றும், தனியார்துறையினரும் தமக்கு தேவையான தகுதியுடையோரை இவ் வங்கியிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும் என்றும் தெரிவித்தார்

# வரைவிட்ட ஊழியர்கள் விண்ணம். தேவையில்லை

(யாழ்ப்பாணம்)

180 நாட்கள் தொடர்ச்சியாக சேவைக்காலத்தை பூர்த்தி செய்த அமைய ஊழியர்களை நிரந்தரமாக்கும் திட்டத்திற்கமைய இணைந்த சேவைக்குட்படாத வரைவிட்ட சேவைகளைச் சேர்ந்த ஊழியர்கள் விண்ணப்பிக்க வேண்டிய அவசியமில்லைஎனத் தெரிவிக்கப்படுகிறது

இவர்களை நிரந்தரமாக்கும் பணியை மாகாண அமைச்

(6ஆம் பக்கம் பார்க்க)

# திருப்பெருந்துறை தொகுதியில் அ. தி. மு. க. முன்னணியில்

(சென்னை)

தமிழ் நாட்டில் நேற்று முன்தினம் நடைபெற்ற சட்டசபைத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தல்களில் திருப்பெருந்துறை தொகுதியில் அ இ. அ தி. மு, க, வேட்பாளர் பெரியசாமி பத்தாயிரம் வாக்கு வித்தியாசத்தில் முன்னணியில் இருப்பதாகவும், அவருக்கு அடுத்தபடியாக வை; கோபாலசாமி தலைமையிலான மறுமலர்ச்சி தி மு, க, வேட்பாளர் இருப்பதாகவும் சென்னையில் தேர்தல் அலுவலக வட்டாரங்கள் கூறியுள்ளன,

இதேவேளை தேர்தல் முடிவுகள் இன்று வெளிவரும் எனவும் தெரிவிக்கப்பட்டது,

(கொழும்பு)

காமினி திசநாயக்காவின் இடத்திற்கு ராஜசேன நாயக்கா மத்திய மாகாண சபை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டுள்ளார் என ஜனநயக ஐக்கிய தேசிய முன்னணி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

காமினி திசாநாயக்கா ஐக்கிய தேசியக்கட்சி பாராளு மன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து இப்பதவி வெற்றிடம் ஏற்பட்டது அதைத் தொடர்ந்து இவர் நியமனம் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது;

# தேசிய பட்டியல் பதவியை விட்டு விலகப் போவதில்லை
## ஆர். டி. சிறிசேன கூறுகிறார்

(கொழும்பு)

வேண்டுகோள் நியாயமானதாக இருக்கலாம்; ஆனால் நான் எனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை விட்டு விலக மாட்டேன் என தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் ஆர். டி. சிறிசேன தெரிவித்துள்ளார்.

தேசிய பட்டியல் மூலம் பலரைப் பாராளுமன்றத்திற்கு அரசாங்கம் கொண்டுவர எத்தனிக்கலாம். அதே வேளை அவர்கள் முக்கியமானவர்களாகக் கூட இருக்கலாம். எது எப்படியான போதும் நான் எனது பதவியை விட்டு விலக மாட்டேன்.

கட்சி ஒற்றுமை கட்டிக் காக்கப்படவேண்டுமெனின் ஏன் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினராக இருக்க வேண்டும் கட்சி அங்கத்தவர்கள் என்ற ரீதியில் இவர்கள் ஏன் செயற்பட முடியாது என அவர் மேலும் கேள்வி எழுப்பியுள்ளார்.

**உலக சுகாதார ஸ்தாபனத்தின்**

# குறும் படங்கள் வடக்கே வர இராணுவம் தடை விதிப்பு

(கொழும்பு)

உலக சுகாதாரஸ்தாபனம் வெளியிட்டுவரும் வீடியோ சஞ்சிகைகள் மற்றும் குறும் படங்களை வடபகுதிக்கு எடுத்து வருவதற்கு சிறிலங்கா இராணுவத்தினர் தடைவிதித்துள்ளனர்

சர்வதேச ரீதியாக கடைப்பிடிக்கப்பட்டுவரும் மருத்துவ சுகாதார நடைமுறைகள் மற்றும் செயற்திட்டங்கள் குறித்தும், பல்வேறு நோய்கள் குறித்த தகவல்களை வெளியிடும் வகையிலும், இவ்வாறான நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து விளக்கம் தரும் வகையிலும் அமைந்திருக்கும் மேற்படி வீடியோ சஞ்சிகைகளை வடபகுதிக்கு எடுத்து வருவதற்கு சிறிலங்கா படையினர் தடைவிதித்துள்ளனர். இதேபோன்று பொது மக்கள் கடைப்பிடிக்க வேண்டியசுகாதார மற்றும்மருந்துவ நடைமுறைகளை விளக்கும் வகையில் தயாரிக்கப்பட்டு உலக சுகாதார ஸ்தாபனத்தினால் வெளியிடப்பட்ட குறும் படங்களையும் வடபகுதிக்கு எடுத்துச் செல்வதற்கு படையினர் அனுமதி மறுத்துள்ளனர்,

(க, தி)

# வரி விளம்பரம்

**காணி விற்பனைக்கு**

சாவகச்சேரி கண்டி வீதியில் சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு முன்பாக உள்ள 2½ பரப்புக் காணி (சதுர வடிவம்) உடன் விற்பனைக்குண்டு. தொடர்புகட்கு; நாதன்ஸ் கூல்பார், சங்கத்தானை, சாவகச்சேரி. (8404)

**இறைச்சி கோழி**

இறைச்சி கோழி எந்நேரமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். சுவையருவி யாழ்ப்பாணம் - நெல்லியடி. [சி-9528]

**உடன் தேவை**

நல்ல நிலையிலுள்ள 15 KW மின்பிறப்பாக்கி (ஜெனரேற்றர்) ஒன்று உடனடியாக விலைக்குத் தேவைப்படுகிறது. தொடர்பு கொள்ளவும்:- சக்திப் பகுதி, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், காங்கேசன்துறை வீதி, தாவடிச் சந்தி, தாவடி, தமிழீழம். (சி-9526)

**தவறிவிட்டது**

27.5.94 அன்று கஸ்தூரியார் வீதிக்கும் த.பொ.மே. நிறுவன காரியாலயம், தாவடிக்கும் இடையில் யாழ் வர்த்தகவங்கி இல: 699432 கொண்ட காசோலை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் அல்லது சீமெந்து கூட்டுத்தாபன காரியாலயம் நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் ஒப்படைக்கவும். (8410)

## ஒளிவீச்சு வெளிவந்தது

விடுதலைப் புலிகளின் நிதர்சனம் நிறுவனத்தின் மாதாந்த வெளியீடான ஒளிவீச்சு வீடியோ சஞ்சிகையின் ஏப்ரல் மாத ஒளிவீச்சு வெளிவந்துவிட்டது.

யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா அவர்களிற்கு தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் விருது வழங்கி கௌரவித்தமை.

தமிழக எழுத்தாளரும் சுபமங்களா ஆசிரியருமான திரு. கோமல் சுவாமிநாதன் அவர்களின் யாழ்ப்பாண விஜயம்,

கொழும்பு நகரை அதிர வைத்த குண்டு வெடிப்புச் சம்பவங்கள்;

தியாகச் சுடர் அன்னை பூபதியின் 6ஆம் ஆண்டு நினைவு தினம்...

# சிறுபான்மையினர் முன்னேற தடை இல்லை

### - விஜித்தசேன தேரர் கூறுகிறார்

இன்று அரசதரப்பினரும் எதிர்த்தரப்பினரும் இந்நாட்டில்இனப்பிரச்சினையொன்று உண்டு எனக்கூறி அதுதொடர்பாக பேசுகின்றனர் ஆனால் இந்நாட்டில் இனப்பிரச்சினையே கிடையாது சிறுபான்மையினர் முன்னேறுவதற்கு எவ்விததடைகளும் கிடையாது நாம் அவர்களுக்கு எவ்வித தீங்குகளையும் இழைத்தது கிடையாது இவ்வாறு சிறிலங்கா இராமஞ்ஞ மகாநிகாயவின் மகாநாயக்க தேரர் பொத்தேவெல பஞ்ஞாசார தேரர் தலைமையில் நடைபெற்ற கூட்டமொன்றில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள மடித்தியவல விஜித்தசேன தேரர் பேசுகையில் தெரிவித்தார்.

இன்று இனப்பிரச்சினை தொடர்பாக இந்நாட்டில் பேசப்படுகிறது சிறுபான்மையினரின் உரிமைகள்பிரச்சினைகள் பற்றி பேசப்படுகிறது சிங்கள பௌத்த மக்களுக்கு உள்ள உரிமைகளில் எந்த உரிமை சிறுபான்மையினருக்கு இல்லை? இன்று இந்தியா, பாகிஸ்தான் சுமாத்ரா, ஜாவா போன்ற நாடுகளில் பௌத்த சமயம் கிடையாது இலங்கையில் மாத்திரமே பௌத்தமதம் காணப்படுகிறது இவை பற்றி பேசினால் பௌத்த பிக்குகளை கொலைகாரர்கள் இன துவேஷிகள் என ஏளனம் செய்கின்றனர் எனவும் அவர் தெரிவித்தார்.

## கோழி நோய் தடுப்பூசி

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் தென்மராட்சி கோட்ட அலுவலகத்தில் கோழி கொள்ளை நோய்க்கு எதிரான தடுப்பூசி ஒவ்வொரு சனிக்கிழமை தோறும் முற்பகல் 9 00 மணிக்கு இலவசமாக போடப்படுகின்றது. தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் தென்மராட்சிக் கோட்ட விலங்கு வேளாண்மை பகுதியினரால் இந் நடவடிக்கை மேற் கொள்ளப்படுகின்றது. கொடிகாமம் பிரதேசத்திலுள்ள மக்கள் இப் பயன்பாட்டின் மூலம் தங்கள் கோழிகளுக்கு கொள்ளை நோய் வராமல் காப்பாற்றிக் கொள்ள முடியும்-

## வீட்டுக் கிருத்திய நினைவஞ்சலி

தோற்றம்:

08. 03. 1928

மறைவு:-

28. 02. 1994




அமரர்

**கணபதிப்பிள்ளை- புவிராசசிங்கம்**

நீங்கள் எங்களை விட்டு மறைந்தாலும் உங்கள் நினைவு எங்களை விட்டு மறையாது எங்கள் குடும்பம் இப்பாரினில் ஒளிச்சுடராய் ஒளி வீச வாழ வைத்த அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம். அன்னாரின் வீட்டுக் கிருத்தியம் 29 05-1994 இல் நடைபெறும்.

உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்.

## 200-ம் நாள் நினைவலைகள்



தென்மராட்சி விசேட பொறுப்பாளர்

**லெப். கேணல் குணா**

**(சுந்தரம் விஜயராஜா - கல்வயல்)**

| தாயின் மடியில்: | மண்ணின் மடியில்: |
|---|---|
| 28 - 11 - 1963 | 11 - 11 - 1993 |

அண்ணனின் சேனையில் அணி திரண்டாய் - அங்கு
அன்னியன் சிரங்கள் பல சிதைத்தாய்,
எம் இனம் வாழ வழி சமைத்தாய் - நீ
மண்ணினைக் காக்க மாவீரன் ஆனாயே!
எண்ணிடும் போதிலும் இனிக்குதடா - உன்
பொன்கரம் வளர்த்திட்ட வேங்கைகளை
சொல்லிடும் முன் மேனி சிலிர்க்குதடா - நீ
காட்டிய பாதையில் ஈழம் வெல்வாரடா!

உமது ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்

நண்பன்

(8409) வீ. கண்ணன்

## இளங்கலைஞர் மன்ற மாதாந்த இசை நிகழ்ச்சி

ஆதரவு: யாழ் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்

இடம்: மன்றக் கலாமண்டபம், சட்டநாதர் வீதி, நல்லூர்

## நினைவு கூருகின்றோம்... 29.05.1994

1987ஆம் ஆண்டு இதே தினத்தில் வீரச்சாவெய்திய,

❋ **குட்டி** (சோமன் யோகலிங்கம் - அம்பாறை)

யாழ் - அரியாலைப் பகுதியில் எமது காவலரண் ஒன்றின் மீது சிறிலங்கா விமானப் படையினர் மேற்கொண்ட விமானத்தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**குபேரன்-குமார்** (இராசரத்தினம் உதயகுமார்- அரியாலை-யாழ்)

வடமராட்சியில் சிறிலங்காப்படையினர் 4-வது நாளாக மேற்கொண்ட ஒப்பறேசன் லிபறேசன் நடவடிக்கையின் போது திக்கம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**பாபு** (நாகராசா சிதம்பர நடராசன் - அல்வாய் வடக்கு, பருத்தித்துறை-யாழ்)

1988ஆம் ஆண்டு யாழ் - உடுப்பிட்டியில் இந்தியப்படையினருடனான சமரின் போது தனது கைக்குண்டை வெடிக்க வைத்து வீரச்சாவெய்திய,

**கப்டன் சிலன்** (முருகன் ஜெயச்சந்திரன் (ஜெகன்) உடுப்பிட்டி வீதி, தொண்டமானாறு-யாழ்)

1989ஆம் ஆண்டு மட்டு- பெண்டுகள் சேனையில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொலைப்பட்ட 03 தமிழர்கள்.

1991ஆம் ஆண்டு வவுனியா - கல்மடுப் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எம்மைப் பிரிந்த

**பல்லவன்** (மகாதேவன் இராசலிங்கம்- பெருவெளி, மூதூர் திருமலை)

முல்லைத்தீவில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப்பிரிந்த,

**உதயன்** (சுப்பிரமணியம் தவராஜா - ஜெயந்திநகர் - கிளிநொச்சி)

1992ஆம் ஆண்டு மட்டு-வாகனேரிப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். ரமேன்-டினேசு** (கணபதிப்பிள்ளை சிவயோகநாதன்-காரைதீவு- அம்பாறை)

**2ம் லெப். சாந்தன்** (இரத்தினசிங்கம் ஐங்கரன்- திருக்கோயில்-அம்பாறை)

**ஜெயசுதானந்தன்- ஜெயசுதன்** (பாலசிங்கம் ரவீந்திரன் - அம்பாறை)

**சௌந்தரலிங்கம் கோகுலவரதன்** (கார்த்திகேசு பாஸ்கரன் - அம்பாறை)

**கப்டன் சிதம்பரநாதன்-முகுந்தன்** (குழந்தைவேல் கோவிந்தராசா- மட்டு)

**லெப். பாலச்சந்திரன்** (வேல்முருகு கணேசமூர்த்தி - மட்டு)

**2-ம் லெப் வனிதன்-புவி** (தங்கையா சுந்தரராஜன் - மட்டு)

**பாலமோகன்-மோகன்** (இராசதுரை கனகரத்தினம் - மட்டு)

**ஜெயகுலன்-கோடீஸ்** (இளையதம்பி மகேந்திரன் - மட்டு)

தியாகச் சுடர் அன்னை பூபதியின் 6ஆம் ஆண்டு நினைவு தினம்;

என்பனவற்றோடு மற்றும் பல கலையம்சங்களையும் தாங்கி ஏப்ரல் மாத ஒளி வீச்சு வெளியாகியுள்ளது.

உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்.

31/6, நடுத்தெரு லேன்,
அரியாலை,
யாழ்ப்பாணம்; (8382)

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

---

## வல்வெட்டித்துறை நகரசபை

# பதவி வெற்றிடங்கள்

பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கு என்னால் 10 - 06 - 94-ம் திகதி நண்பகல் 12.00 மணிவரை அவ் அவ் பதவிகளுக்குரிய தகைமைகளையுடைய விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பங்கள் யாவும் செயலாளர், நகரசபை, வல்வெட்டித்துறை என்ற முகவரியிட்டு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

### அ) பதிவேட்டுக் காப்பாளர் / அலுவலக உதவியாளர்

1. க. பொ. த. சாதாரண பரீட்சையில் எண்கணிதம், தமிழ் பாஷை ஆகிய பாடங்கள் உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாமல் ஆறுபாடங்களில் சித்தி எய்தி இருக்கவேண்டும்
2. 18 வயதுக்கு குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும்
3. இலங்கை பிரஜையாய் இருத்தல் வேண்டும்
4. வல்வெட்டித்துறை நகரசபை எல்லைக்குள் வசிப்பவராய் இருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

### ஆ) சமயா சமய / பதில் சுகாதாரத் தொழிலாளர்

1. கனிஷ்ட தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்
2. 18 வயதுக்கு குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும்
3. இலங்கைப் பிரஜையாய் இருத்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களை காரியாலய நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

நகரசபை அலுவலகம்,
வல்வெட்டித்துறை.
19 - 05 - 94 (சி-9541)

**செயலாளர்**
**நகரசபை வல்வெட்டித்துறை**

---

இடம்: மன்றக் கலாமண்டபம், சட்டநாதர் வீதி, நல்லூர்

காலம்: **29-5-1994** ஞாயிறு மாலை 5 மணி

### நிகழ்ச்சி நிரல்

மாலை

**5. 00 - 5. 25** பாட்டு
செல்விகள், இ நயோமி, எஸ் மாலினி, எஸ். குகாநந்தி, ப. சியாமளா, ஜெ வித்தியாயினி, செ. கரோலின், தி. தாரணி, சி. சிவரம்யா, ம. நிவேதிகா, பா. நிரஞ்சனா, செல்வி கே. சுகிர்தா-வயலின், திரு ப. ரதிருபன் -மிருதங்கம்

**5. 25 - 5. 50** வீணையிசை
செல்விகள், சிவலிங்கம் கலைமதி, நடராஜா அமுதா, ஸ்ரீகாந்தன் ஸ்ரீரஞ்சனி குகதாசன் சயந்தி, ஸ்ரீஸ்கந்தராஜா -பிரியதர்சினி, தெய்வேந்திரன் ரேணுகா, ராஜேந்திரா கிருசாந்தி,
செல்வன் ஸ்ரீவத்சாங்கன் - மிருதங்கம்

**5.50 - 6. 35** பாட்டு
திருமதி மகேஸ்வரி சுப்பிரமணியம் - பாட்டு
செல்வி பாக்கியலக்ஷ்மி நடராஜா - வயலின்
திரு. எஸ். துரைராசா - மிருதங்கம்
எம். கஜன் - கடம்

**6.35 - 7.45** இசைக்கச்சேரி
திரு. எஸ். குமாரசாமி - பாட்டு
திரு. ஆர். எஸ். கேசவமூர்த்தி - வயலின்
திரு. எஸ். கண்ணதாசன் - மிருதங்கம்
திரு. ப. ரதிருபன் - கடம்

**7.45 - 8. 15** மங்களவிளக்கேற்றல்
திரு. ஆ. ச. தியாகராஜா அவர்கள் (பணிப்பாளர் யாழ் ப நோ. கூ சங்கம்)
செல்வி ஆ. மகாதேவி பி. ஏ. (பணிப்பாளர், யாழ் ப. நோ. கூ. சங்கம்)

தலைமையுரை: திரு சொலமன் சூ. சிறில் அவர்கள் (தலைவர் யாழ் ப. நோ. கூ. சங்கம்)

பிரதம விருந்தினர் உரை: கலாநிதி கந்தையா குணராசா அவர்கள் (செங்கை ஆழியான்) பிரதேச செயலர் யாழ்ப்பாணம்

**8.15 - 9.30** இசை நாடகம்
''களத்தில் காத்தான்'' புகழ்
புத்தூர் புதுவை அன்பனின்
**“சதியை வென்ற சாவுகள்”**
இசை நாடகம்

கலாரஸிகர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்!

மேற்படி மன்றத்தினர்
(சி 9540)

---

**ஜெயகுலன்-கோட்டீஸ்** (இளையதம்பி மகேந்திரன் - மட்டு)

**ராகவன்** (மனுவல் ஜெயராஜ் - மட்டு)

முல்லைத்தீவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். மறவன்-ரஞ்சித்** (பரமசிங்கம் தவபாலன்- ஒட்டிசுட்டான்-முல்லைத்தீவு)

**2-ம் லெப். நந்தன்** (கனகலிங்கம் சுதர்சன்- நெடுங்கேணி - மணலாறு)

**2-ம் லெப். நாயகன்-கபில்** (கதிரமலை வேதீஸ்வரன் -துன்னாலை தெற்கு-கரவெட்டி)

**2-ம் லெப். மாணன்-ரவிச்சந்திரன்** (நடேசலிங்கம் உதயமோகன் - புளியடி ஒழுங்கை, காங்கேசன்துறை-யாழ்)

வவுனியா, மாமடுவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான காவலரண் தகர்ப்பில் வீரச்சாவெய்திய,

**கப்டன் துரைக்கண்ணா-சரத்** (அந்தோனிப்பிள்ளை சகாயரெக்னோ - வேப்பங்குளம், வவுனியா)

**சயந்திரன்** (அடைக்கலம் சிவகுமார்-மாத்தளை-மலையகம்)

யாழ்-அராலிப் பகுதியில் வேவு பார்க்கச் சென்ற சமயம் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கிய போது வீரச்சாவெய்திய,

**தமிழன்** (சிவராசா புவனேந்திரராசா - மணியந்தோட்டம், யாழ்)

1993ஆம் ஆண்டு பொலநறுவை, ஜெயந்தியா கிராமத்தில் சிறிலங்கா இராணுவ மினிமுகாம் மீதான தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**ஈழக்குமார்-சுமன்** (அழகுப்போடி தயாபரன்-புதுக்குடியிருப்பு, மட்டு)

**ஆகியோரை இந்நாளில்**

**நினைவு கூருகின்றோம்.**

❋ இக்குறிப்பிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.


**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-9539)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்

# பிரபலம் மிக்க கிரிக்கெட் ஆட்டக்காரர் சண்ணுடன் ஒரு சந்திப்பு

இன்று யாழ்ப்பாணத்தில் கிரிக்கெட் துறையில் மிக நீண்ட காலம் களத்தில் நின்று தம் திறமையை வெளிக்காட்டும் வீரர்கள் குறிப்பிடத்தக்க அளவில் காணப்படுகிறார்கள். இவர்களுள் திரு- V. K. சண்முகலிங்கம் அவர்களும் ஒருவர். 'சண் அண்ணை' என்றும், 'இரும்புமனிதன்' என்றும் ரசிகர்களாலும், ஏனையோராலும் அன்பாக அழைக்கப்படும் இவரை நேர்காணல் ஒன்றுக்காக சந்திக்க முயன்றபோது கிரிக்கெட் மைதானங்களிலேயே இலகுவாகச் சந்திக்கக் கூடியதாக இருந்தது, யாழ் இந்துக்கல்லூரி மைதானத்திலும் பின்னர் பல்கலைக்கழக மைதானத்திலும் இவரை சந்தித்து உரையாடியபோது தன் அனுபவங்களை மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொண்டார். 48 வயதினைக் கடந்துவிட்ட அவரிடம் இளமைக்கால அனுபவம், பிரவேசம் பற்றிக் கேட்ட போது -



''நான் எனது கல்வியை அரியாலை சிறிபார்வதி வித்தியலயத்திலும் பின்னர் ஸ்ரான்லிக் கல்லூரியிலும் தொடர்ந்து யாழ் மத்திய கல்லூரியிலும் பெற்றுக் கொண்டேன். இயற்கையாகவே மிகுந்த கூச்சசுபாவம் கொண்டவனாக இருந்த என்னை பலவந்தமாகக் கொண்டுவந்து அறிமுகப்படுத்தியவர் திரு. E. கனகலிங்கம் மாஸ்ரர்தான். இது 63-ல் நடைபெற்றது நான் அறிமுகமானது உதைபந்தாட்டத் துறையிலாகும். இவர் என்னை அன்று இனங்கண்டிராவிட்டால் இன்று இந்நிலையில் இருக்க மாட்டேன் கிரிக்கெட் பிரவேசம் 64இல் எனது ஆசான் T. ஆலாலசுந்தரம் அவர்களால் நிறைவேறிற்று. என் தாய் தந்த பாலும், இறைவனின் அருளும் இயற்கையாகவே அபரிமிதமானபந்து வீச்சு வேகத்தை எனக்குத்தந்திருந்தன. இதனால் உடனடியாகவே 19வயதிற்குட்பட்ட அணியின் ஆரம்ப வேகப்பந்து வீச்சாளன் என்ற இடத்தைப் பெற்றுக்கொண்டேன் இதேகாலப் இலாகாவில் சேர்ந்து கொண்டேன், 70-ல் அரச சேவைப் போட்டியொன்றில் ஈட்டி எறிதலில் 3-ம் இடம் பெற்றுக்கொண்டேன். 70-ல் கிரிக்கெட், உதைபந்தாட்டம் இரண்டிலும் 'A' அணியின் உறுப்பினனானேன். 82 வரை எனது விளையாட்டு நிகழ்வுகள் புகையிரத இலாகவுடனேயே இணைந்திருந்தது. இங்கு 10 வருடங்கள் நானே ஆரம்ப வேகப்பந்து வீச்சாளன்.

மீண்டும் யாழ்ப்பாணத்தில் விளையாட்டு நிகழ்வுகளை எப்படி ஆரம்பித்தீர்கள் என்றபோது

''நான் 83-ல் யாழ்ப்பாணம் வந்தேன் எனது உற்சாகம் என்றும் போலவே இருந்தது ஏறத்தாள 20 வருடங்கள் விளையாட்டுத் துறையின் பல்வேறு நிலைகளில் நான் சோபித்துப் இங்கு அதற்குரிய அங்கீகாரம் உடனடியாகக் கிடைத்தது என்று கூறிவிட முடியாது இந்தவேளையில் எனது நண்பரும் யாழ் வர்த்தக வங்கி உதவி முகாமையாளரும் தற்போது சென்றலைட்ஸ் அணியில் ஆடிக்கொண்டிருப்பவருமான எஸ். பி. ரஜீவனை நினைக்கின்றேன் நான் சென்றலைட்ஸில் இன்று குறிப்பிடத்தக்க இடம் பெறுகிறேன் என்றால் அதற்கு அவர் தான் காரணம் என்னை சென்றலைட்ஸ் அணிக்கும் 86ல் அறிமுகப்படுத்தியதே ரஜீவன் தான் இன்று சென்றலைட்சும் நானும் வேறல்ல 87இல் நான் சென்றலைட்ஸ் அணியின் தலைவனாக்கப்பட்டேன். 93இல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற 5 மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் போட்டிகளில் 4இல் வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்தோம். இச் சுற்றுப் போட்டிகளில் அணித்தலைவனாக இருந்ததோடு இரண்டு முறை ஆட்டத்தின் கதாநாயகனாகவும் தெரிவு செய்யப்பட்டேன். 88ஆம் ஆண்டில் தொழில் நிமித்தம் சாப்ராவுடன் இணைந்தாடியதை விட, தொடராக சென்றலைட்ஸ் அணியுடனேயே எனது தொடர்புகள் இருந்து வருகின்றன

நீங்கள் ஸ்ரான்லிக் கல்லூரியில் கிரிக்கெட் பயிற்றுநகராக இருந்தமை பற்றி... ?

இது நடைபெற்றது 88இல் ஆகும் உண்மையில் நான் பயிற்றுநராக உருவாக்கப்பட்டேன் என்று தான் கூறவேண்டும். பயிற்றுநராக நான் வரக்காரணம் எனது ஆசான் திரு கே. வி தனேஸ்வரன்தான் ஸ்ரான்லிக் கல்லூரி கிரிக்கெட் அணிகளைப் பயிற்றுவித்தது தொடர்பாக ஒரு குறிப்பைக் கூறலாம் மிகக் குறுகிய காலத்தில் பயிற்சி பெற்ற 15, 17, 19 வயதிற்குட்பட்ட மூன்று அணிகளும் 90 94 காலப்பகுதியில் எந்த அணியுடனும் தோல்வி காணவில்லை இதற்குக் காரணம் தோல்விகளில் இருந்து நாங்கள் பெற்றுக் கொண்ட படிப்பினைகள் தான்.

இன்னொரு விடயம், 93 அக்டோபரில் இருந்து நான் யாழ் பல்கலைக்கழக அணியின் பயிற்றுநராக நியமிக்கப்பட்டேன். இத்தகுதியை எனது விளையாட்

மிக முக்கிய நன்மைகள் தொழில் வாய்ப்பு அதன் மூலம் உயர்வு

விளையாட்டால் நீங்கள் எதையாவது இழந்து விட்டோம் என்று கருதியிருக்கிறீர்களா?

நிச்சயமாக இல்லை. பொருளாதார நட்டம் ஏற்பட்டது உண்மைதான். நான் பெற்றஆத்ம திருப்திக்கு முன்னால் அது பொருட்டேயல்ல. நோயற்ற வாழ்வும், மனமகிழ்ச்சியும் பெற்றுள்ளேனே நிறையவே நண்பர்களையும், அன்பர்களையும் பெற்றுக்கொண்டேனே பின்னர் எவ்வாறு இழப்புப் பற்றிய கேள்வி எழும்?

> இளம் ஆட்டக்காரருக்கு ... "ஒழுங்கான பயிற்சி பெறுங்கள், உங்களை அர்ப்பணியுங்கள் குருவை மேலாக மதியுங்கள், எதிரணியினரை மதியுங்கள், மத்தியஸ்தரை மதியுங்கள் பார்வையாளர், ரசிகர்கள் தான் உங்களின் சொத்து அவர்களை எப்பொழுதும் நேசியுங்கள் ..."

இன்றைய இளந்தலைமுறை வீரர்களுக்கு நீங்கள் கூற விரும்புவதென்ன?

ஒழுங்கான பயிற்சி- தன் குருவை மதித்தல்- எதிரணியினரை எப்போதும் மதித்தல்- மத்தியஸ்தனுக்குக் கட்டுப்படல் - சகங்களுக்கு விளையாடும் போது தம் பூரண ஒத்துழைப்பைக் கொடுத்தல், எந்தச் சிறந்தவொருவீரனும், மூத்த உறுப்பினரை மதித்து நடத்தல்.

விளையாட்டு கல்விக்குக் குந்தகம் என்ற ஒரு கருத்து நிலவுவது பற்றி?

இதனை நான் ஏற்கவில்லை, மைதானத்தில் பாதம் படாத மாணவன் பூரண மனிதனல்ல விளையாட்டையும், கல்வியையும் ஒரு சேரஒழுங்குபடுத்திப் பின் பற்றிக் கொண்டு வந்தால் ஒன்றிற்கொன்று உறுதுணையாக இருக்கும் பயிற்சியாளர் கூட தம்மிடம் பயிலும் வீரர்களுக்கு கல்வி ஒழுங்கமைப்புத் தொடர்பாக உதவ முடியும் கல்வியும், விளையாட்டும் முரண்படுமென்றால் இன்றொரு பலம் வாய்ந்த பல்கலைக்கழக அணி எவ்வாறு உருவாக முடியும்? ஒரு பயிற்சியாளன் எத்தன்மைகள் கொண்டமைந்திருக்க வேண்டும்?

தன் விளையாட்டின் சகல நுணுக்கங்களையும் அறிந்திருக்க வேண்டும் அதோடு தான் செய்து காட்டவும் வேண்டும் ஒழுக்கம் முன்மாதிரி என்பன முக்கியமானவை தோல்விகளைச் சந்திக்க ஒருவர் பயிற்சி கொடுப்பதில்லை ஆனால் தோல்வியையும் ஏற்கும் மனப்பாங்கை வளர்க்கக் கூடியவனாக இருக்க வேண்டும்.

உங்கள் குடும்பத்தினரின் ஒத்தாசை எப்படியமைந்துள்ளது?

என் பெற்றோர் எப்பொழுதும் தம் முழு ஒத்துழைப்பையும் எனக்குத் தந்துள்ளனர் அதே போல தொடர்ந்து என் மனைவி பரிபூரண ஒத்துழைப்பு வழங்கி வருகிறார் இத்தகைய ஒத்துழைப்பு இன்றேல் 30 வருடங்கள் இத்துறையில் மன நிம்மதியுடன் நீடித்திருக்க முடியுமா ?

இதுவரை நீங்கள் பிரதிநிதித்துவப்படுத்திய அணிகள்...?

ஸ்ரான்லிக் கல்லூரி - மத்திய கல்லூரி - பொலிஸ் - றெயில்வேஸ் - சென்றலைட்ஸ் -சப்றா- அரியாலை விளையாட்டுக்கழகம்

உங்களால் மறக்கமுடியாத ஆட்டங்கள்?

92-ல் டொனால்ட் கிண்ணப் போட்டியில் ஒரு ஓட்டத்தால் ஷப்றாவை வென்றமை

93-ல் டொனால்ட் கிண்ணத்துக்கான 1 ஓட்டத்தால் மானிப்பாய் பரிஷ் அணியை வென்றமை

89 ல் கொக்குவில் ம. ச. ச. அணியை 8 ஓட்டங்களால் வெற்றிகண்டமை (ஜெலிஸ்ரார் போட்டி) தொடர்ந்து 5 விக்கட்டுகளை வீழ்த்தியதன் மூலம் இவ்வெற்றி சாத்தியமாகியது தொடர்ந்துகலந்துரையாடலின்போதுதான்விரும்பும்ஆட்டக்காரர்கபில்தேவ் என கூறி சண் எனது ஒவ்வொரு வெற்றியின் போதும் என் பெற்றோரை வணங்குகிறேன்' என்கிறார் கிரிக்கெட் உலகில் எனது முத்திரையைப் பதிக்க உதவியவர்கள் சென்றலைட்ஸ் அவர்களை நேசிக்கின்றேன் என்கிறார்

உங்கள் எதிர்காலத்திட்டம் என்ன என்று வினவியபோது ...'' யாழ்ப்பாணத்தில் 14 வயதுக்கு உட்பட்ட வீரர்களைத் தெரிந்தெடுத்து அவர்களை வேகப்பந்து வீச்சாளர்களாக உருவாக்கும் திட்டம் ஒன்று உள்ளது. இதற்கு பல்கலைக்கழக விளையாட்டுப் பணிப்பாளர் தியாகராசா ஐயாவும் எனது குரு திரு தனேஸ்வரனும் ஒத்துழைப்புத்தருவதாகக் கூறியுள்ளார்கள் விரைவிலேயே இத்திட்டத்தை செயற்படுத்தலாம் என்ற நம்பிக்கை உண்டு என்கிறார்

உங்கள் பிள்ளைகள் எந்தளவிற்கு கிரிக்கெட் ஆட்டத்தில் ஆர்வம் காட்டுகிறார்கள்?

எனது மூத்தமகன் அகிலன் பற்றீசியன் அணித்தலைவராக ஆடிக்கொண்டிருக்கிறார் இளையவர் நிமலன் ஜொனியன்ஸ் அறுவர் கொண்ட குழுவிற்குத் தலைவராக இருக்கிறார் இவர் 17 வயதுக்குட்பட்டவர் அரியாலை பவள விழாச்சுற்றுப்போட்டியில் இவரின் அணி வெற்றிக்கிண்ணத்தைப் பெற்றது தற்போது ஸ்கந்தா சுற்றுப்போட்டியில் இறுதியாட்டத்துக்கு இவ்வணி தகுதிபெற்றுள்ளது நாங்கள் மூவரும் பரஸ்பரம் எதிர்எதிராக நேருக்குநேர் மோதும் சந்தர்ப்பங்களே யதார்த்தமாக உள்ளது விளையாட்டுத் துறையின் சிறப்புக்கு இது ஒரு உதாரணமும் கூட?

ரசிகர்கள் பற்றி:-?

ரசிகர் இல்லாத மைதானத்தில் எங்களுக்கென்ன வேலை கிரிக்கெட் ஆட்டத்தை வளர்ப்பவர்களே அவர்கள்தான் அவர்கள் நீங்கள் போடும் சதத்தையோ வீழ்த்தும் விக்கெட்டுகளையோ அல்லது உங்கள் வெற்றிக்கிண்ணத்தையோ மட்டும் கவனிக்கவில்லை நீங்கள் மைதானத்திலும் வெளியிலும் எப்படி நடந்து கொள்கிறீர்கள் என்பதையும் கூர்ந்து கவனிக்கிறார்கள் அதன்மூலம் தான் அவர்களின் செல்வாக்கை நீங்கள் பெற இயலும் எனக்கு ரசிகர்களின் அன்பு இருப்பதாகவே முழு நம்பிக்கை இருக்கிறது எனினும் இதற்கான பதிலை ரசிகர்கள் தான் சொல்லவேண்டும்.

இறுதியாக விடை பெறும் போது ''எனது விளையாட்டுத்துறை அனுபவங்கள் ஒரு கட்டத்தையடையும் போது நான் ஆன்மீகத்துறையில் கூடிய ஈடுபாடு கொள்வேன் எனக்கு ஆன்மீகத்துறை மிகவும் விருப்பமானதொன்று என்றார் 'சண்அண்ணை

**நேர்காணல்; நிர்மலன்**




> "விளையாட்டு அனுபவம் என்பது அதி சிறந்த செயற்பாடு என்பதை விட வித்தியாசமானது அனுபவமும் அனுபவத்தை மதிப்பதும், அனுபவஸ்தர்களிடம் இருந்து

## பந்துவீச்சாளர்களை நிலைகுலையவைக்கும்

“விளையாட்டு அனுபவம் என்பது அதி சிறந்த செயற்பாடு என்பதை விட வித்தியாசமானது அனுபவமும் அனுபவத்தை மதிப்பதும், அனுபவஸ்தர்களிடம் இருந்து பெற்றுக் கொள்வதுமே உங்களை நீண்ட காலம் களத்தில் நிலைத்திருக்கச் செய்யும்......”

பகுதியில் கரபந்தாட்டம், பல்துறை தடகள நிகழ்ச்சிகள் போன்றவற்றிலும் ஈடுபடலானேன் 65இல் JSSA போட்டிகளில் கெந்திமிதித்துப் பாய்தல் ஈட்டி எறிதல், நீளம்பாய்தல் முதலியவற்றில் 1ம் இடம் பெற்றேன் ஸ்ரான்லி கல்லூரியில்கற்கும்போது யாழ் பாடசாலைத் தெரிவு உதைபந்தாட்டக் குழுவில் விளையாடினேன். 65இல் அகில இலங்கை AAA போட்டிகளில் கெந்தி மிதித்துப்பாய்தல் நீளம்பாய்தல் ஆகியவற்றில் 3-ம் இடத்தைப் பெற்றேன் பின்னர். யாழ் மத்திய கல்லூரியில் கல்வியைத் தொடரும் போது விளையாட்டுத்துறையில் இன்னமும் மெருகேற்றப்பட்டேன் கிரிக்கெட்டைப் பொறுத்தவரை இங்கு திருவாளர்கள். JD ஜெயரட்ணசிங்கம் T.செல்வராஜா உதைபந்தாட்டத்தில திரு. கிருபாகரன் ஆகியோரால் புடம்போடப்பட்டேன்.
65-ல் JSSA உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் மத்திய கல்லூரி வெற்றிவாகை சூடியபோது அதில் நானும் ஒரு அங்கத்தவன்”

○ உங்கள் விளையாட்டுத்துறை பிரவேசம், மிகத்தாமதமாக அதாவது 19 வயதின் கீழ் என்ற வகையில் அமைந்தது உங்கள் சாதனைப் பட்டியலை குறைத்துத்தான்விட்டது. உங்கள் மாணவப் பருவம் மறக்கமுடியாத விளையாட்டுத்துறைஅனுபவங்கள்...?

1966 இல் யாழ் மாவட்ட பாடசாலைகள் கிரிக்கெட் குழுவில் நானும் டொனால்ட் கணேசகுமாரும் தான் ஆரம்ப வேகப் பந்துவீச்சாளர்கள் அது மட்டுமன்றி எமது யாழ் மாவட்ட அணி, கொழும்பு வடக்கு பாடசாலை அணியை வெற்றிகொண்டு இறுதியாட்டத்தில் கொழும்பு தெற்கு பாடசாலை அணியுடன் மோதியது, இந்த இறுதிப் போட்டியில் நானும் டொனால்ட்டும் இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்து ஆட்டத்தை சரிசமனாக்கினோம். ஆனாலும முதல் இனிங்சில் கூடிய ஓட்டங்கள் பெற்ற அணி என்ற வகையில் கொழும்பு தெற்கு வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரிக்க நாங்கள் RUNNERS UP என்ற நிலைக்குள்ளானோம்.

○ நீங்கள் தொழில் வாய்ப்புப் பெற்றபின் உங்கள் விளையாட்டுச் செயற்பாடுகள் எவ்வாறமைந்தன?

“1967-ல் நான் பொலிஸ் திணைக்களத்தில் சேர்ந்து கொண்டேன். அங்கு எனக்கு நிறையவே சந்தர்ப்பங்கள் இருந்தன. பொலிஸ் அணியில் உதைபந்தாட்டம், கிரிக்கெட் தடகள நிகழ்ச்சிகளில் பெரும் பங்குகொண்டேன். 67-ல் அரச சேவையாளர் தடகளப் போட்டிகளில் நீளம்பாய்தலில் முதலிடம் பெற்றேன். பொலிஸ் உதைபந்தாட்ட ‘A’ அணியிலும் கிரிக்கெட் ‘B’ அணியிலும் அங்கம் வகித்தேன். அம்பாறை மாவட்ட உதைபந்தாட்ட அணியிலும் அங்கம் வகித்தேன் இதன் பின்னர் 68-ல் புகையிரத

காரணம் தோல்விகளின் இருந்து நாங்கள் பெற்றுக் கொண்ட படிப்பினைகள் தான்.
இன்னொரு விடயம், 93 அக்டோபரில் இருந்து நான் யாழ் பல்கலைக்கழக அணியின் பயிற்றுநராக நியமிக்கப்பட்டேன். இத்தகுதியை எனது விளையாட்டுத்துறை அனுபவத்தின் ஒரு மைல் கல்லாகக் கருதுகின்றேன்.

○ தியாகராஜா ஐயா காலத்தில் மிளிரத் தொடங்கிய பல்கலைக்கழக அணி உங்கள் காலத்தில் ஒரு வீச்சுடன் மேலோங்கும் என்று கருதுகிறீர்களா?

இத்துடன் இன்னொன்றையும் சேர்த்துக் கொள்ளுங்கள், வீரர்கள் மிகவும் பணிவும் அடக்கமும் கொண்டவர்கள் புதிதாகக் கற்க ஆசைப்படுபவர்கள். அவர்கள் என் அன்புக்குரியவர்கள் நான் அவர்களின் தொண்டனாவதன் மூலம் என் கடமையை உரிமையுடன் செய்து பல்கலைக்கழகத்தின் பெருமையை உயர்த்த முடியும் என்பதே அது. இந்த வருட ஆரம்பத்திலேயே KCCC சுற்றுப் போட்டியில் வெற்றிவாகை சூடினோம்

○ 64 முதல் 94 வரை மிக நீண்டகாலம் கிரிக்கெட் ஆடுகிறீர்கள். நீங்கள் களைப்போ, சலிப்போ அடையவில்லை. என்பது நிதர்சனமாகத் தெரிகிறது. இது எப்படி?

நான் அணியில் ஒரு வீரன்- தலைவன் - முகாமையாளன்- பயிற்றுநர்- மத்தியஸ்தன்-போட்டிகளை ஒழுங்குபடுத்துபவன்- இவ்வளவுக்கும் காரணம் விளையாட்டைப் புனிதமானதாகவும், தெய்வீகமானதாகவும் கருதுவதுதான். “நீ விளையாடும் அணிக்கு விசுவாசமாக இரு” என்று என் ஆசான் திரு ஜெயரட்ணசிங்கம் கூறியது எப்பொழுதும் என்னுள் எதிரொலித்துக் கொண்டே இருக்கும்.

○ நீங்கள் உணர்வுபூர்வமாகி நிற்கும் சந்தர்ப்பங்கள் ஏதாவது?

என் தாயின் விருப்பம் நான் ஒரு ஆசிரியனாக வரவேண்டும் என்பதாக இருந்தது. நடைமுறை வாழ்க்கையில் அது சாத்தியமாக வில்லை. இருந்தும் பாடசாலை மாணவ மணிகளுக்கும், பல்துறைசார் பல்கலைக்கழகப் பட்டதாரி மாணவருக்கும் கிரிக்கெட் ஆசானாகிவிட்டேன். ஏதோ ஒரு வகையில் என் தாயாரின் விருப்பம் நிறைவேறிவிட்டதாக நான் பல சந்தர்ப்பங்களில் சிந்திப்பதுண்டு. இன்னொன்று, ஸ்ரான்லிக் கல்லூரி மாணவன் ரோணி யாழ். இந்துவுக்கு எதிராக 101 ஓட்டங்கள் பெற்றமை நான் பெற்ற ஆனந்த அனுபவமாகும்

○ 48 வயதின் பின்னரும் அதே இளமையும், செயற்பாடும் களத்தில் கொண்டிருக்கிறீர்கள், இது எவ்வாறு சாத்தியம்?

எனது விடாமுயற்சி, தீராத பயிற்சி இன்றும் கற்றுக் கொண்டிருப்பது- நான் கற்றதை என்னை நாடும் எந்த வீரனுக்கும் ஒளிவுமறைவின்றி பரிபூரண உண்மையுடன் சகல நுணுக்கங்களையும் சொல்லிக் கொடுப்பது.

○ விளையாட்டுத் துறையால் நீங்கள் பெற்றுக் கொண்ட நன்மைகள்?

வாழ்க்கையின் ஒழுங்கமைப்பும், கட்டுப்பாடும்

# பந்துவீச்சாளர்களை நிலைகுலையவைக்கும் இளம்புயல் - சச்சின்

தற்போது உலகெங்கிலுமுள்ள பிரபல அனுபவம் வாய்ந்த பந்து வீச்சாளர்களால் கூட “ஆட்டமிழக்க வைக்க முடியாமல் திணற வைப்பவர்” சச்சின் டெண்டுல்கர். இச்சிறிய வயதிலேயே இப்படி என்றால் அனுபவம் பெற்ற பிறகு என்ன பாடுபடுத்தப்படுகிறாரோ என்று அனைவரும் ஏக்கப்படுகின்றார்கள் சச்சின் ஒருநாள் கிரிக்கெட் போட்டியின் பரபரப்பை டெஸ்ட் கிரிக்கெட் போட்டியிலும் கொண்டு வரப் போகும் இளம் புயலாக உருவெடுத்திருக்கின்றார்

தற்போது ஒருநாள் போட்டிகளில் இந்திய அணியின் துவக்க ஆட்டக்காரராகத் திகழ்கின்றார் எந்த



நிலைகளில் ஆட்டத்தை ஆட வேண்டுமோ அந்த நிலையில் பொறுமையாக ஆடுபவர் சச்சின்: இதற்கு தக்க சான்றாக அண்மையில் நியூசிலாந்து அணிக்கெதிராக நடைபெற்ற ஒருநாள் போட்டியைக் குறிப்பிடலாம் இப்போட்டியில் நியூசிலாந்து அணி 142 ஓட்டங்களை 49. 4 வது ஓவரில் பெற்று சகல விக்கெட்டுகளையும் இழந்தது. காலநிலை சீரின்மையால் ஆட்டத்தை மிக விரைவில் முடித்துக் கொள்ள வேண்டிய நிலையில் களத்தினுள் இந்தியாவின் தொடக்க ஆட்டக்காரர்களான அஜேய் ஜடேஜா, இளம்புயல் சச்சின் ஆகிய இருவரும் நுழைந்தனர் அஜேய் ஜடேஜா ஒரு புறம் ஆட்டத்தை கவனிக்க மறுபுறம் சச்சின் மிக வேகமாக 82 ஓட்டங்களை 49 பந்துகளில் 70 நிமிடத்தில் குவித்தார். இதில் எல்லைக்கோட்டைத் தாண்டிய பந்துகள் 15 எல்லைக் கோட்டுக்கு மேலால் பறந்த பந்துகள் 2. 17 பந்துகள் 72 ஓட்டங்கள்.

இந்திய அணியின் தலைவர் அஸாருதின் கூறுகையில் சச்சின் ஆடியதில் பாதியாவது ஆடியிருந்தால் நாம் உலகக் கோப்பையை வென்றிருப்போம் என சச்சினைப் புகழ்ந்தார்

“ஹீரோ” கோப்பையின் இறுதியாட்டத்திற்கு தகுதி பெறுவதற்கான அரையிறுதியாட்டத்தில் தென் ஆபிரிக்க அணியினை கடைசி ஓவரை மிகத்துணிவுடன் வீசி கடைசி விக்கெட்டான அலன் டொனால்டை வீழ்த்தியதன் மூலம் இறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றிருந்ததும் சச்சினாலேயே எனவே அணிக்குச் சங்கடமான வேளைகளிலும் திருப்பத்தை ஏற்படுத்துகின்றார்.

சச்சினின் பள்ளிப்பருவ சாதனைகள் மித மிஞ்சியவை. 1987-88 சீசனில் அவர் 8 சதங்களையும் இருநிகரில்லாத 300 ரன்களையும் குவித்தார் அவருடைய அபரிமிதமான ரன்குவிக்கும் திறனாற்றலால் 15வயதில் “ரஞ்சி கோப்பை” ஆட்டத்திற்கு தெரிவானார் இதிலும் மேலதிக திறமை வெளிப்படவே பாகிஸ்தான் செல்லும் அணியில் இடம்பெற்று அங்கு ஓர் காட்சிப் போட்டியில் பங்குபற்றிய இவர் உலகின் பிரபலமான சுழல்பந்து வீச்சாளர் அப்துல்காதரின் ஓவர்களில் 9 சிக்ஸர்களை விளாசித்தள்ளியதன் மூலம் உலக அரங்குகளில் சச்சின் அனலாகத் திகழ்ந்தார்.

1990 இல் இங்கிலாந்திற்கு விளையாடச் சென்றிருந்த சச்சின் தனது முதலாவது சதத்தை ஓல்ட்ட்ராஃபோர்டில் பெற்றார் இதன் மூலம் ஆட்டத்தின் அசைக்கமுடியாத இளம்புயலாக மாறினார். இதன் பின்னர் சிட்னியில் ஆஸ்திரேலியாவுக்கெதிராக 148 ஓட்டங்களையும் பெற்றார். இன்னும் இங்கிலாந்திற்கெதிராக 1993 சீசனில் 164 ஓட்டங்களை எடுத்தார் தற்போது உலகக் கிரிக்கெட் போட்டியில் மிகவேகமாக சாதனைகள் குவிவதும் அச்சாதனைகள் மிகவிரைவில் முறியடிக்கப்படுவதும் தவிர்க்க முடியாதது காரிசோபர்ஸின் சாதனையை பிறைன் லாறாவும் சேர் றிச்சார்ட் ஹட்லியின் சாதனையை கபில்தேவும் முறியடித்ததும் இவற்றுள் குறிப்பிடத்தக்கது இந்த இளவயதில் அபரிமிதமான ஆற்றல் பெற்றுள்ள சச்சின் பல சாதனைகளை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறார் என்பது மிகையல்ல நிச்சயமாக எதிர்காலத்தில் ஆற்றலும் அனுபவமும் கூடிவர உலகப் பந்து வீச்சாளர்களுக்கு இவர் சிம்மசொப்பனமாகத்தான் திகழப் போகின்றார்

கதிர். குலேந்திரன்
யாழ் இந்துக்கல்லூரி

## பிற்போடப்பட்டுள்ளது

யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கம் நடாத்தும் பாடசாலை அபிவிருத்தி நிதிக்கான அதிர்ஷ்டலாபச்சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணங்களால் இன்று 29 05-94ல் நடைபெறமாட்டாது. எதிர்வரும் 29-06 94-ல் அதிர்ஷ்டம் பார்க்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம்

பழைய மாணவர்சங்கம்
யா-கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி

(சி-9538)



### யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்
## தற்காலிக தொழிலாளர் வெற்றிடம்

யாழ்ப்பாண மாநகரசபை அமைய அடிப்படையில் சுத்திகரிப்புப் பணியுடன் கழிவுப் பொருட்களையும் நிர்மாணப் பொருட்களையும் ஏற்றியிறக்கும் பொதுத் தொழிலாளர்களை நியமனம் செய்வதற்கு தீர்மானித்துள்ளது.

கீழ்க்காணும் தகைமையுடையோர் தாமே தயாரித்த விண்ணப்பத்துடனும் தமது தகைமைகளை நிரூபிக்கும் மூலச்சான்றிதழ்களுடன் தேசிய அடையாள அட்டையுடனும் எதிர்வரும் 04-06-94-ம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நல்லூர் பண்டாரமாளிகை வளவிலமைந்துள்ள மாநகரசபை அலுவலகத்திற்குச் சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகைமைகள்

அ) கல்வி - ஐந்தாம் வகுப்பில் சித்தி
ஆ) வயது - 18 வயது தொடக்கம் 40 வயது வரை
இ) யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

மாநகரசபை அலுவலகம், வே.பொ. பாலசிங்கம்
யாழ்ப்பாணம், 24-05-1994 மாநகர ஆணையாளர்
(சி-9536)



THE EXPRESS INSTITUTE KOPAY
A BOON TO STUDENTS

O/L

பரீட்சையில் தவறிய மாணவர்க்கான,

இறுதியான,
அரிய சந்தர்ப்பம்.....

O/L DAY CLASS
(காலை 8.00-பி ப 1.00)

மேலும் சிறிதளவு மாணவர்க்கு மட்டுமே இடம் வழங்க உத்தேசித்துள்ளோம்

(சி-9532)


# அர்ப்பணிப்புடனான சேவை இதுவே கல்விக்குத் தொண்டு

### துணைவேந்தர் குணரத்தினம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பரந்துபட்ட நோக்குடனும் சிறந்த அர்ப்பணிப்புடனும் பல்கலைக்கழக ஆசிரியர்களும் ஊழியர்களும் சேவையாற்ற வேண்டும். இதுவே இன்றைய காலகட்டத்தில் இந்தக் கல்விச் சமூகத்திற்கு செய்யும் பெருந்தொண்டாகும் என யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் க. குணரத்தினம் தெரிவித்தார்.

புதிய துணைவேந்தராக பேராசிரியர் க. குணரத்தினம் நியமனம் பெற்றுள்ளதைப் பாராட்டி யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் வரவேற்பு விழா ஒன்றினை நடாத்தியது. மேற்படி சங்க தலைவர் தலைமையில் நடைபெற்ற இவ் வரவேற்பு விழாவில் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் பேராசிரியர் சண்முகதாஸ், பல்கலைக்கழக பதிவாளர் திரு. பரமேஸ்வரன் உட்பட பலர் உரைநிகழ்த்தினர். இவர்களது உரைக்கு நன்றி தெரிவித்து உரை நிகழ்த்துகையிலேயே துணைவேந்தர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், சீரான சூழ்நிலை நிலவும் காலங்களில் கூட எந்தவொரு துணைவேந்தரும் ஆசிரியர்களினதும் ஊழியர்களினதும் மாணவர்களினதும் பூரண ஒத்துழைப்பின்றி பல்கலைக்கழகத்தினை நிர்வகிக்கமுடியாது. சமுதாயத்தின் ஆணிவேர் கல்வியே. இதனைச் சீரழியவிடாது பாதுகாக்க வேண்டியது எங்கள் எல்லோரதும் கடமையும் பொறுப்புமாகும். ஊழியர்கள் பல்கலைக்கழகத்தை ஒரு தொழில் நிறுவனமாகக் கருதி செயல்படக்கூடாது இதனை பயன்படுத்தி ஆதாயந்தேட முற்படுவது வருந்தத்தக்கது.

நான் இங்கு பதவியேற்ற மூன்றுமாதங்களிலும் கடமை நேரத்தில் முக்கால் பங்கும் ஆசிரியர்களினதும் ஊழியர்களினதும் லீவு விண்ணப்பங்களுக்கும் மேலதிக வேலை நேரப்படி விண்ணப்பத்திற்கும் கையொப்பமிடுவதிலேயே கழிந்துள்ளது. ஒவ்வொருவரும் எவ்வளவு மேலதிகமாக உழைக்கலாம் எவ்வளவு லீவு எடுக்கலாம் என்றே பார்க்கிறார்கள். இந்த நிலை முற்றாக மாறவேண்டும்

பல்கலைக்கழகம் எந்தவொரு தனிநபரினதும் சொத்தல்ல அது பொதுச்சொத்து என்பதை மனதில் நிறுத்திட வேண்டும் என்றார்

(ச, சி, க)

## உலர் உணவு முத்திரை விநியோகிக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இடம் பெயர்ந்தவர்களுக்கான இலவச உலர் உணவு முத்திரைகள் கொழும்பில் இருந்து கப்பல் மூலமாக எடுத்து வரப்பட்டு யாழ் செயலக புனர்வாழ்வுப் பகுதிக்கு எடுத்து வரப்பட்டுள்ளது.

இவ் உலர் உணவு முத்திரைகளை யாழ் செயலக புனர்வாழ்வுப் பகுதி சகல உதவி அரச அதிபர் பிரிவுகளுக்கும் உடன் விநியோகித்து வருகின்றது.

இதுவரை மேற்படி உலர் உணவு முத்திரைகளை சில உதவி அரச அதிபர் பிரிவுகள பெற்றுக்கொள்ள வில்லை எனவும் அவை உடன் இவற்றைப் பெற்று கிராம சேவகருடாக இடம் பெயர்ந்தவர்களின் குடும்பங்களிற்கு விநியோகிக்கும் படியும் புனர்வாழ்வுப் பகுதியினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

அத்துடன் ஏப்ரல் மாதத்திற்கான நான்கு கிழமைகளுக்குமான உலர் உணவுப் பொருள்கள் சேர்த்து வழங்கப்படவுள்ளதாகவும் இம் மாதத்திற்கான நான்கு கிழமைகளுக்குமான பொருள்களும் அடுத்த முறை சேர்த்து மிகவிரைவில் விநியோகிக்கப்படவுள்ளதாகவும் புனர்வாழ்வுப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

மேலும் இவற்றிற்கான உலர் உணவுப் பொருள்களையும் ஏற்கனவே பலநோ. கூ. சங்கங்களுக்கு புனர்வாழ்வுப் பகுதியினரால் விநியோகிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது

(பா, தி)

## பதவியிலிருந்து என்னை எவரும் விலக்க முடியாது

### அமைச்சர் ரேணுகா ஹேரத் தெரிவிப்பு

(கொழும்பு)

என்னை அமைச்சர் பதவியில் இருந்தோ அல்லது பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்தோ விலக்கப்போவதில்லை என அமைச்சர் ரேணுகா ஹேரத் தெரிவித்தார்.

கட்சிக்கோ அல்லது நாட்டிற்கோ துரோகம் அல்லது பிழை செய்திருந்தாலே என் மீது கட்சி நடவடிக்கைஎடுக்க வேண்டும் அல்லது நான் விலக வேண்டும் நான் அப்படி ஒன்றும் செய்யவில்லை. எனது கை சுத்தமானது ஆகவே பயப்படப்போவதில்லை என மேலும் அவர் தெரிவித்துள்ளார்

பத்திரிகையாளர் இன்று எமது கட்சியில் பிளவுகளை ஏற்படுத்தி தலைமைப் பீடத்தை பலவீனப்படுத்த முயல்கின்றனர் இதனை ஒருநாளும் அவர்களால் செய்யமுடியாது. கட்சியில் ஒருமைப்பாடு தொடர்ந்து கட்டிக்காக்கப்படும். இதில் எந்தவித சந்தேகமும் இல்லை என அவர் தொடர்ந்து தெரிவித்தார்.

## மருந்துகள் அன்பளிப்பு

(கொழும்புத்துறை)

வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச்சங்கம் வைத்தியசாலையில் நிலவும் முக்கிய மருந்து வகைகளுக்கான தட்டுப்பாட்டை நீக்கும் முகமாக சுமார் 15ஆயிரம் ரூபா பெறுமதியான மருந்து வகைகளைத் தனியார் மருந்தகங்களில் கொள்வனவு செய்து வைத்தியசாலைப் பொறுப்பதிகாரியிடம் அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இச்சங்கம் இங்கு பழுதடைந்த செயற்படாத நிலையில் இருந்த வைத்தியசாலை அம்புலன்ஸ் வண்டியைத் தனது செலவில் திருத்திக் கொடுத்துள்ளது இத்திருத்த வேலைகளுக்காக சுமார் 50ஆயிரம் ரூபாவரை செலவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### பிரேமதாசா கொலை விசாரணை;
## குடும்பத்திற்கு விபரங்களை தெரிவிக்க டி. பி. பணிப்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாச கொலை தொடர்பாக பொலிஸாரும், குற்ற புலன் விசாரணை தொடர்பாக இதுவரை கிடைத்துள்ள தகவல்களை பிரேமதாசா குடும்பத்தினருக்கு தெரிவிக்குமாறு ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா பணிப்புரை விடுத்துள்ளார்.

இதுவரை பிரேமதாசா கொலை தொடர்பான விசாரணைகளின் பெறுபேறுகளை இவர்கள் தெரிந்து கொள்ள தீவிர முயற்சி கொண்டுள்ளதாகவும், எனவே உங்களுக்கு இது வரை கிடைத்த தகவல்களை அவர்களுக்கு தெரிவிக்குமாறும் இது தொடர்பாக பூர்வாங்க விளக்கங்களை கொடுக்குமாறும் டி. பி பணித்துள்ளார்.

பொலிஸ் மா அதிபர் பிராங் டி சில்வா, குற்றப் புலன் விசாரணை பிரிவு பிரதி பொலிஸ் அத்தியட்சகர் அமரசிங்க ராஜபக்சவுக்கு அவர் இவ்வாறு பணிப்புரைகளை வழங்கியுள்ளார்.

## ஆங்கில ஆசிரியர் போட்டி பரீட்சை ஜூனில்

(கொழும்பு)

ஆங்கிலஆசிரியர்கள் தொடர்பான போட்டிப் பரீட்சை ஜூன் மாதம் 11ஆம் திகதி நடைபெற இருப்பதாக பரீட்சைத்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கைமுழுவதிலுமிருந்து சுமார் ஐம்பத்திநான்காயிரம் பேர் இப்பரீட்சைக்கு தோற்ற இருப்பதாகவும் அவர்களுக்கான பரீட்சை அனுமதி அட்டைகள் தற்போது அனுப்புவதற்கான ஏற்பாடுகள் நடைபெறுவதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

## செயற்குழு உறுப்பினராக சிறிசேன கூரே தெரிவு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் சிறிசேன கூரேயும் பிரதி பொதுச்செயலாளர் காமினி அத்துக்கோரளையும் ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு உறுப்பினர்களாக மீண்டும் தெரிவாகியுள்ளனர்.

தற்போதைய செயற்குழு உறுப்பினர்கள் பதவி விலகிச் செல்வதை அடுத்து இவர்கள் தெரிவாகியுள்ளனர் என்று ஐ.தே.க.வின் தலைமைக்காரியாலயமான 'சிறிகொத்தா' தெரிவித்துள்ளது

## யாழ். மாவட்டத்திலுள்ள ஆசிரியர் வெற்றிட அறிவிப்பு

(கொழும்பு)

யாழ் மாவட்டத்தில் தற்போது நிலவும் ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் குறித்து கொள்கைத் திட்டமிடல் அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் தற்போது நிலவும் ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் குறித்த தகவல்களை தமக்கு அனுப்பி வைக்கும்படி கொள்கைத்திட்டமிடல் அமைச்சு கோரிக்கை விடுத்ததைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

யாழ் மாவட்டத்தில் உள்ள இரண்டு கல்வி வலயங்களில் இருந்தும் மேற்படி விபரங்கள் சேகரிக்கப்பட்டு அரசாங்க அதிபரினூடாக மேற்படி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது (க)

## குற்றவாளிகளை பாதுகாக்க முன்நிற்பது ஏன்?

### சுதந்திரக்கட்சி எம்.பி. [illegible]

(கொழும்பு)

தென் பகுதியில் வாழும் தமிழர்களின் [illegible] முகாம்களில் உள்ள தமிழ்க் கைதிகளின் அடிப்படை உரி[illegible]

இடம் வழங்க உத்தேசித்துள்ளோம்

(சி-9532)

...மீது கட்சி நடவடிக்கைகளெடுக்க வேண்டும் அல்லது நான் விலக வேண்டும் நான் அப்படி ஒன்றும் செய்யவில்லை. எனது தொடர்ந்து கட்டிக்காக்கப்படும். இதில் எந்தவித சந்தேகமும் இல்லை என அவர் தொடர்ந்து தெரிவித்தார்.

...செலவில் திருத்திக் கொடுத்துள்ளது இத்திருத்த வேலைகளுக்காக சுமார் 50 ஆயிரம் ரூபாவரை செலவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது

இவ்வைத்தியசாலையில் பழுதடைந்த நிலையில் உள்ள நோயாளர் பாவிக்கும் கட்டில்களையும் பழுதடைந்த நிலையிலுள்ள ஏனைய தளபாடங்களையும் திருத்திக்கொடுப்பதற்கும் மேற்படி அபிவிருத்திச் சங்கம் சகலநடவடிக்கைகளையும் தற்போது மேற்கொண்டு வருகின்றது

இச்சங்கத்தினர் செய்து வரும் அளப்பரிய சேவைகளுக்கு வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் எஸ் அப்பாத்துரை பாராட்டும் நன்றியும் தெரிவித்துள்ளார் (24)

## சுதந்திரக்கட்சி எம்.பி கேள்வி

(கொழும்பு)

தென் பகுதியில் வாழும் தமிழர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு முடியாத சர்வதேச தொண்டர் அமைப்புகள் பாதாள உலக குற்றவாளிகளை பாதுகாக்க முன்னிற்பது ஏன்? என கம்பஹா மாவட்ட சுதந்திரக் கட்சி எம் பி பெர்னான்டோபுள்ளே கேள்வி எழுப்பியுள்ளார்

நீர்கொழும்பில் உறவினருடன் ஒரு தமிழர் ஓரிரவு கூட தங்கமுடியாது. தங்கினால் அவசரகால சட்ட விதிகளின் மூலம் அவர் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்படுவார். இதே போன்றே பூஸா மற்றும் வேறு தடுப்பு முகாம்களில் உள்ள தமிழ்க் கைதிகளின் அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்றன

இந்த மனித உரிமை மீறல்களில் தலையிட்டு தமிழரின் பாதுகாப்பை உறுதிப்படுத்த மனித உரிமை அமைப்புகள் முன்வராதது ஏன்? பாதாள உலக குற்றவாளிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் அமைப்புகள் இந்த விடயத்தில் ஏன் மௌனம் சாதிக்கின்றன எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

அண்மையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சொத்தி உபாலியை சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் சென்று பார்த்ததாகஎதிர்க்கட்சி உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டியது தெரிந்ததே.


## தேடல் - 3

தேடல் ஒன்றாக இரட்டைச் சூட்டடுப்பும்,
தேடல் இரண்டாக ஆக்கிவாயுவும்,

வெற்றிநடை போடும் இவ்வேளையில்,

### இதோ - தேடல் - 3

**"காற்றுவலு இயந்திரங்கள்"**

எரிபொருட் தடையால் ஏங்கும் விவசாயிகளே,
மின்கலங்களை மின்னேற்றிப் பாவிக்கதுடிப்பவர்களே
உங்கள் சுமைகளைப் போக்கிச் சுகமாக்க வந்துள்ளது

**"காற்றுவலு இயந்திரங்கள்"**

⊛ நீரிறைக்க ⊛ மின்பிறப்பாக்க
⊛ மின்கலங்களுக்கு மின்னேற்ற

**"காற்றுவலு இயந்திரங்கள்"**

உங்கள் தேடலுக்கு எங்கள் முகவரி:-

**சக்திப் பகுதி**

**தமிழீழ பொருண்மியமேம்பாட்டுநிறுவனம்**

அரசியல்துறை - தமிழீழ விடுதலைப் புலிகள்

**காங்கேசன்துறை வீதி, தாவடி,**

**தமிழீழம்.**

*"எரிபொருட் தடையை இனிக்காற்றாலை உடைக்கும்,*
*நீரிறைக்கும், மின்வழங்கும் - புதியயுகம் படைக்கும்"*

(சி-9519)



இப்பொழுது திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையத்திலும், கந்தரோடை பிரதான வீதியிலும் இவை இயங்கிக் கொண்டிருக்கின்றன.



✻ உங்கள் மின்பிறப்பாக்கி பழுதடைந்துள்ளதா?
✻ புதிதாக ஒரு மின்பிறப்பாக்கியை அமைத்துக்கொள்ள விரும்புகிறீர்களா?
✻ மின்விநியோக வேலைகள் செய்ய வேண்டியுள்ளதா?

**கவலை வேண்டாம்.**

✻ நீண்டகால உத்தரவாதத்துடன் நல்லமுறையில் மின்பிறப்பாக்கிகளைத் திருத்திக் கொள்ளவும்,
✻ புதிய மின்பிறப்பாக்கிகளை அமைத்துக்கொள்ளவும்,
✻ மின் விநியோக வேலைகளை திருப்திகரமாகவும், திறமையாகவும், செய்து கொள்ளவும்,

**நாடுங்கள்:- சக்திப் பகுதி**

**தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்,**
காங்கேசன்துறை வீதி,
தாவடிச் சந்தி,
தாவடி,
தமிழீழம்.

**"உங்கள் தேவைக்கு- எங்கள் சேவை"**

(சி-9525)

பொது நூலகம் யாழ்ப்பாணம்

## சிந்தனைக்கு

மதவெறியானது, அம்மதத்தையே கொன்று
அதன் ஆவியைக் காட்டி அச்சுறுத்த விழைகிறது
—சார்ல்ஸ் கோல்டன்


ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 29-05-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண் - 05


## பெளத்தர்கள் கேட்பது என்ன?

ஏனைய மதங்களைவிட பெளத்த மதத்திற்கு உரிய உயரிய, அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்றகோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது. ஓர் அணி பெளத்த பிக்குகள் தலைமையில் நடத்தப்பட்ட வாக்குவேட்டையின் முடிவில், பத்து லட்சம் கையொப்பமிட்ட மகஜர் டி.பி. விஜேயதுங்காவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் இவ்வாறானதொரு கோரிக்கை ஏன் என்பதே தற்பொழுது எழுந்துள்ள முக்கியமான கேள்வியாகும்; ஏனெனில், பெளத்த மதம் இன்று உத்தியோக பூர்வமாக அரசமதம் என அறிவிக்கப்படாது விட்டாலும் சிறிலங்கா சுதந்திரம் பெற்ற காலத்தில் இருந்தே அரச மதத்திற்கு உரிய சகல அந்தஸ்தோடும், சில வேளை அதற்கும் மேலான சலுகைகளையும் அனுபவித்து வருகின்றது. சுருக்கமாகக் கூறுவதானால் எழுதப்படாத சட்டமாக, பெளத்தம் அரச மதம் என்பது நடைமுறையில் உள்ள தென்றே கூறலாம்.

இதனை நிரூபிக்குமாப் போன்றே அரச சின்னங்கள் அரசியலமைப்பு சட்டம் அனைத்திலும் பெளத்தத்திற்குரிய அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக அரசியலமைப்புச் சட்டத்தில் பெளத்த மதம் ஏனைய மதங்களைவிட முதன்மைப்படுத்தப்பட வேண்டும் எனச்சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை எவர் விரும்பியோ விரும்பாமலோ இன்றுள்ள அரசியற் சூழ்நிலையில் ஒரு பெளத்த சிங்களவர் அல்லாதவர் நாட்டின் தலைவராக வருவதற்கான வாய்ப்பே இல்லை. அரசியலமைப்புச் சட்டத்தில் அவ்வாறானதொருவரையறை செய்யப்படாத இடத்தும் நடைமுறையில் தற்பொழுதோ அன்றி எதிர்காலத்திலோ அது சாத்தியமாகப் போவதில்லை.

சிறிலங்காவின் அரச சின்னத்திலும் தேசியக் கொடியிலும் பெளத்த சின்னங்கள் தெளிவாகவே குறிப்பிடப்பட்டுள்ளன. அரச சின்னத்தின் மேற்பகுதியில் அசோகசக்கரம்குறிப்பிடப்பட்டுள்ளது தேசியக்கொடியில் அரச மர இலைகள் பெளத்திற்குரிய இடத்தைப் பிடித்துள்ளன. இவையாவற்றுடனும், பெளத்தத்தைப் பாதுகாக்கவென பெளத்த சாசன அமைச்சும் ஒன்று உள்ளது.

# உயிர்கொல்லியாகச் சீதனம் கருதப்படல் வேண்டும்

### சீதனத்தடை கருத்தரங்கில் செல்வி ரதி

(யாழ்ப்பாணம்)

''இன்று எம் மண்ணிலே நடைபெறுகின்ற போராட்டமானது தேசவிடு தலையை மட்டும் நோக்காகக் கொண்டிராமல் கூடவே சமூக விடுதலையையும் முன்னெடுத்துச் செல்கின்றது அந்த வகையிலே சமூகத்தில் மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தி வரும் 'சீதனம்' தடை செய்யப்பட வேண்டியது அவசியமாகின்றது சீதனம் தனியே ஒரு பெண்ணையோ அல்லது ஒரு குடும்பத்தையோ பாதித்து வரவில்லை. ஒட்டு மொத்தமாக அது சமூகத்தையே பாதிக்கின்றது து ஒரு 'உயிர்க் கொல்லி' யாகவே கருதப்பட்டு களையப்பட வேண்டியது இச்சீதனப் பிரச்சினை பற்றி நாம் அசமந்தப் போக்கை கொண்டிருப்போமேயானால் நாளைய சந்ததி எம்மைத் தூற்றும். சமூகத்தில் பூதாகாரமாக உருவெடுத்திருக்கும் இச் சீதனத்தை ஒழித்துக் கட்ட வேண்டியதன் அவசியம் தற்போது உணரப்பட்டுள்ளது இதன் தாற்பரியத்தை அனைவரும் புரிந்து கொண்டு 'சீதனப் பேயை' விரட்டி அடிக்க ஒத்துழைப்பு நல்க வேண்டியது முக்கியமானதாகும்'' இவ்வாறு கடந்த புதன்கிழமை சீதனத் தடைச் சட்டம் பற்றி நாவற்குழி லவனிதா குடியிருப்பில் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றிய மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி ரதி தெரிவித்தார்.

மகளிர் அமைப்பின் திவசக் கோட்ட உதவிப் பொறுப்பாளர் செல்வி இளவரசி தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் செல்வி ரதி தொடர்ந்து கூறுகையில்:-

''சமூகத்தில் பல்வேறு அடக்கு முறைகளுக்கும் வழிசமைத்து வருகின்ற சீதனமானது எத்தனையோ குடும்பங்களின் வாழ்க்கையை சீரழித்து சின்னா பின்னப் படுத்துகின்றது. காலம் கடந்தும் கண்ணீரோடு வாழா வெட்டிகளாக எத்தனையோ கன்னிப் பெண்கள் அவல வாழ்வு வாழ்வதும், சமுதாயத்தில் வசைச் சொற்களுக்கு ஆளாகி அவமானம் தாங்காது உயிரை மாய்த்துக் கொள்வதும், வாழ்க்கைப் பட்ட பின்பும் சீதனக் கொடுமைகளால் பிரிந்து வாழ்வதும் பெண்ணைப் பெற்றாலே பெருஞ்சுமை என எண்ணி மாய்ந்து போகும் தந்தையர், தாய்மார் உடல் உளரீதியாக பாதிப்புறுவதும், உயிருக்குயிரான காதல் கூட திருமணம் வரை சென்று முறிந்து போவதும் என இப்படி எத்தனையோ எண்ணிலடங்கா பாதிப்புக்கள் 'சீதனம்' புரிந்து வரும் சீரழிவுகளாகும் இக் கொடிய விளைவுகளை ஏற்படுத்தும் சீதனம் ஒரு விஷமாக எண்ணப்பட வேண்டும்: நாளை எமது தேசம் விடிவு பெறும் போது மக்கள் நிம்மதியாக வாழவேண்டும். எந்தவொரு சமூக அடக்கு முறையுமேமக்களை துன்பப்படுத்தக் கூடாது என்பதற்காகவே விடுதலைப் புலிகள் சீதனத்தை தடைசெய்ய முயல்கின்றனர்: நாட்டை மீட்கப் போராடும் அதேவேளை சமூக நோய்களையும் அகற்றி மக்கள் நிம்மதியாகவும் சந்தோஷமாகவும் வாழ வழி செய்வதற்காகவே சீதனம் என்ற இச் சமூக நோயையும் விரட்ட விரைகின்றனர். இந்த முயற்சிக்கு மக்கள் அனைவரும் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அதன் மூலம் சீதனம் எம் மண்ணில் முற்றாக ஒழிக்கப்பட வேண்டும். இது நாளைய எமது சமூகத்தின் நிம்மதியான வாழ்விற்கான அத்திவாரம் ஆகும்'' என்றும் அவர் தெரிவித்தார். (22

# கொழும்பில் உலகத்தொடர் ஒருநாள் கிரிக்கெட் போட்டி

(கொழும்பு)

எதிர்வரும் செப்டம்பர் மாதம் 4ஆம் திகதியிலிருந்து 17ஆம் திகதிவரை கொழும்பில் சிங்கர் உலகத் தொடர் என்ற பெயரில் புதிய சர்வதேச கிரிக்கெட் போட்டி ஒன்று நடைபெறவுள்ளது. இப்போட்டியில் அவுஸ்ரேலியா, பாகிஸ்தான், இந்தியா, சிறிலங்கா ஆகிய நான்கு நாடுகள் பங்குபற்றுகின்றன.

4ஆம் திகதி சிறிலங்கா இரவு - பகல் போட்டியில் இந்தியாவை கெத்தாராமை அரங்கில் எதிர்த்தாடும். 7ஆம் திகதி அவுஸ்ரேலியா-பாகிஸ்தான் போட்டி நடைபெறும் 9ஆம் திகதி அவுஸ்ரேலியா-இந்தியா இரவு பகல் போட்டி. 11 ஆம் திகதி சிறிலங்கா-பாகிஸ்தான், 13ஆம் திகதி அவுஸ்ரேலியா - சிறிலங்கா, 15ஆம் திகதி இந்தியா - பாகிஸ்தான் இரவு-பகல் போட்டி, 17ஆம் திகதி இறுதிப்போட்டி இரவு பகல் போட்டியாக கெத்தாராமை அரங்கில் நடைபெறும்.

இறுதிப்போட்டியில் வெற்றியடையும் குழுவிற்கு 15 ஆயிரம் அமெரிக்க டாலர்கள் இரண்டாவது குழுவிற்கு 7,500 அமெ. டாலர்கள் சிறந்த ஆட்டக்காரருக்கு 1500 அமெ. டாலர்கள் முழுத்தொடரிலும் சிறந்த ஆட்டக்காரருக்கு4000 அமெ. டாலர்கள் வழங்கப் படும்.

ஆரம்பசுற்றில் வெற்றிபெறும் அணிகளுக்கு 2500 அமெ. டாலர்களும் இரண்டாம் அணிக்கு 1500 அமெ.டாலர்களும் சிறந்த ஆட்டக்காரருக்கு 500 அமெ. டாலர்களும் வழங்கப் படும்.

இந்த தொடர் ஆட்டங்கள் உள்நாட்டு வெளிநாட்டு தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்படவுள்ளன.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994 -05 -29**
**ஞாயிறு இரவு**

08, 01- இசையரங்கம்- நிகழ்ச்சியில் பாடுபவர் தாலபுரத்தான் அவர்கள்
08. 30 - செய்திகள்
08 40- தொடர் நாடகம் இலங்கை மண்- 25 ஆம் அங்கம்

**1994- 05- 30**
**திங்கள் காலை**

07. 02- மாவீரவணக்கம்
07 15 - மணியாரம்
07. 30 - செய்திகள்
07. 35- பத்திரிகைச் செய்திகள்
07 40- தாயகப் பாடல்கள்

# அரசியலமைப்பு உத்தரவாதம் உறுதித்தன்மையைப் பேணாது

### மார்க்கா நிறுவன தலைவர் கொட்பிறே

அரசியலமைப்பு ரீதியால் உத்தரவாதங்கள் மட்டும் பல்லின சமூகத்தில் உறுதியான தன்மையை பேணுவதற்குப், போதுமானதல்ல என்பதையே யூகோஸ்லாவியாவின் சிதைவு எடுத்துக்காட்டுவதாக மார்க்கா நிறுவனத் தலைவர் கொட்பிறே குணதிலக்கா கூறியுள்ளார்.

மார்க்கா நிறுவனத்தில் நடைபெற்ற அதிகாரப்பரவலாக்கல் தொடர்பான கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில் 1920களில் அதிகாரப் பரவலாக்கலை வலியுறுத்தியவர் டபிள்யூ ஆர் டி. பண்டாரநாயக்காவே என்றும் அப்போது தமிழர்களின் அரசியல் எண்ணம் வேறாக இருந்தது என்றும் சுட்டிக் காட்டினார்

இக்கருத்தரங்கில் பிரதான உரையாற்றிய பேராசிரியர் பெட்ரம் பஸ்தியாம்பிள்ளை தமது உரையில் புவியியல் ரீதியான ஒருமைப்பாடு மட்டும் ஒரு தேசத்தின் ஒருமைப்பாடாகாது என்றும் வெவ்வேறு இன மக்களும் தத்தமக்கென தனியான அடையாளங்களைக் கொண்டிருக்கின்றனர் என்றும், ஒரே அடையாளத்தை ஏற்கும்படி மற்றஇனங்களை நிர்ப்பந்திப்பது பயன் தராது என்றும் தெரிவித்தார் அத்துடன் பலத்தைப் பயன்படுத்துவது என்பது நவீன ஜனநாயகத்திற்கே ஒவ்வாதது என்றும் குறிப்பிட்டார்.

தென்ஆபிரிக்காவின் அரசியலமைப்பில் சிறிலங்காவிற்கு இசைவான பல அம்சங்கள் காணப்படுவதாகவும் அவர் எடுத்துரைத்தார்

இக்கருத்தரங்கில் முன்னாள் அதிகாரியான ஷெல்டன் வனசிங்க பேராசிரியர் சூரியநாராயணன் யாழ்முன்னாள் அரசாங்க அதிபர் யோகேந்திரா துரைசுவாமி உட்படபலர் உரையாற்றினர்

## அரச அதிபர் பயணம்

(வடமராட்சி)

யாழ் அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் வெள்ளி பிற்பகல் கொழும்புக்கு புறப்பட்டுச் சென்றார் நோயாளிகளை ஏற்றிச்சென்ற 'பிளைங் பயோன்' கப்பல் மூலம் சென்றார். (யோ)

# தமிழீழக் கடற் பரப்பிலே நாளாந்தம் பல போராட்டங்கள் நடக்கின்றன

### கருத்தரங்கில் பாலகுமாரன் உரை

கடலிலேநாளாந்தம்போராட்டம் நடக்கின்றது. கடலின் தன்மை, கடலில் நடக்கும் போராட்டம் எல்லோருக்கும் தெரியாது ...

அடிப்படை கற்கைநெறியில் கல்வி பயின்று வெளியேறும் 90 பயிற்சியாளர்களையும் பயிற்சியை வழங்கியவர்களை ...

வித்தார்.

மேலும் கடல் வளம் ஒரு பெரிய வளம் எனவும் இது முழுமையாக பயன்படுத்தப்ப ...

# மாணவர்களை ஈடுபடுத்தி மரநடுகையை அதிகரிப்போம்

### பரிசளிப்பு விழாவில் ரவி

(பருத்தித்துறை)

''மர நடுகைத் திட்டங்களிலே மாணவர்களை ஈடுபடுத்திஊக்குவிப்பதன்மூலமே மரநடுகைத் திட்டங்கள்மூலம் எதிர்பார்க்கும் வெற்றிகளைப் பெற்றுக்கொள்ளமுடியும். இத ...

கும்எனவே மரம்நாட்டும்இயக்கங்களை நாம் பெரிய அளவில் மேற்கொள்ளவேண்டும் மரங்களை நாட்டிவிட்டால் மட்டும் போதாது அவைகளைப் பாதுகாத்துப்பராமரிக்கவும் வேண்டும்

மாணவர்களுக்கு ...

சிறிலங்காவின் அரச சின்னத்திலும் தேசியக் கொடியிலும் பௌத்த சின்னங்கள் தெளிவாகவே குறிப்பிடப்பட்டுள்ளன. அரச சின்னத்தின் மேற்பகுதியில் அசோகசக்கரம்குறிப்பிடப்பட்டுள்ளது தேசியக்கொடியில் அரச மர இலைகள் பௌத்திற்குரிய இடத்தைப் பிடித்துள்ளன. இவையாவற்றுடனும், பௌத்தத்தைப் பாதுகாக்கவென பௌத்த சாசன அமைச்சும் ஒன்று உள்ளது.

இவைதவிர இலங்கையில் பௌத்தத்தின் ஆட்சியே உள்ளது என்பதை நிரூபிக்குமாப்போல் காலத்திற்குக் காலம் ஏனைய மதத்தினர் தாக்கப்பட்டுள்ளனர். அவர்களின் வழிபாட்டு ஸ்தலங்கள் அழிக்கப்பட்டுள்ளன. பௌத்த காடையர்களினாலும், அரசபடைகளினாலும் வணக்க ஸ்தலங்கள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளன. பிறமத தெய்வங்களும் ஆலயங்களும் இழிவுபடுத்தப்பட்டுள்ளன. சுதந்திரமாக ஆலயங்களுக்குச் சென்று வழிபடும் அடிப்படை உரிமை மறுக்கப்பட்டுள்ளது

தெளிவாகக் கூறுவதானால், இன்று இலங்கையில் நடைபெறும் போருக்கும், பெருமளவு இரத்தம் சிந்தப்படுவதற்கும், அடிப்படைக் காரணங்களில் முக்கியமானது பௌத்தமதமே ஆகும். அரசமதம் என்று உருவாகி விட்ட நிலையும், இலங்கைத்தீவு பௌத்தருடையதென்று சிறிலங்கா அரசாங்கம் கொண்டுள்ள பேரினவாதச் சிந்தனையுமே இந்நிலையை உருவாக்கியது.

இந் நிலையில் மீண்டும் பௌத்தமதத்திற்கு ஏனைய மதங்களைவிட உரிய-உயரிய-அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை என்பது எதனைக்குறிக்கின்றது; ஏனைய மதங்கள் எல்லாவற்றையும் அழித்துவிட்டு பௌத்தமதம் மட்டும் இலங்கையில் இருக்க வேண்டும் என வலியுறுத்தப்படுகின்றதா? அல்லது, பௌத்த மதத்திற்கு ஏனைய மதங்கள் யாவும் கீழ்ப்பட்டு இருக்கவேண்டும் எனக்கருதப்படுகின்றதா? உண்மையில்இது பௌத்தரின் மதவெறி தவிர வேறு எதுவுமில்லை.

பௌத்த - சிங்களவர்கள் இலங்கையில் உருவாக்கிய இனமோதல்கள் இன்னமும் தீர்ந்தபாடில்லை. இதனால் பெரும் பொருளாதார நட்டமும் உயிர்ப்பலியும் ஏற்பட்ட போதும் அரசு அதை முடிவுக்குக் கொண்டு வருவதைப்பற்றிச் சிந்திக்கவில்லை.

தற்பொழுது பத்துலட்சம் பௌத்தர்கள் விடுத்துள்ள கோரிக்கையானது இலங்கையில் மதங்களுக்கு இடையிலான புதிய மோதல்களை எதிர்காலத்தில் உருவாக்குவதற்கே வாய்ப்பளிக்கக் கூடும். ஆனால் சிறிலங்காவில் உள்ள ஆட்சியாளர்கள் இதனை எவ்வாறு நோக்குவார்கள் என்பதும் முக்கியமானது. ஏனெனில், பத்து லட்சம் வாக்குகள் கிடைக்கும் என்றால் அவர்கள் ஏனைய மதங்களையே அழித்துவிடக் கூடியவர்கள் என்பதில் மட்டும் எவரும் சந்தேகப்படத் தேவையில்லை.

# பல போராட்டங்கள் நடக்கின்றன

## கருத்தரங்கில் பாலகுமாரன் உரை

கடலிலேநாளாந்தப்போராட்டம் நடக்கின்றது. கடலின் தன்மை, கடலில் நடக்கும் போராட்டம் எல்லோருக்கும் தெரியாது கடலன்னையின் மடியில் உள்ள உங்களுக்கு தெரியும் மக்களின் வாழ்வு போராட்டமாகமாறி வருகின்றது இது கடலில் நடக்கும் போராட்டமாகமாறி உள்ளது மக்கள் புதிய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்கள் என திரு. வே பாலகுமாரன் அவர்கள் கடந்த ஞாயிறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கேணல் கிட்டு நினைவு மண்டபத்தில் நடந்த மீன்பிடியியல் கற்கை நெறி நிறைவு விழாவில் பேசும்போது தெரிவித்தார்.

கடந்த இரண்டுமாதமாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் யாழ் பல்கலைக்கழக புறநிலைப்படிப்புக்கள் அலகினால் நடாத்தப்பட்ட மீன்பிடியியல் அடிப்படை கற்கைநெறியில் கல்வி பயின்று வெளியேறும் 90 பயிற்சியாளர்களையும் பயிற்சியை வழங்கியவர்களையும் பாராட்டும் முகமாக இந் நிகழ்வு நடைபெற்றது.

இந் நிகழ்வில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப்பணிப்பாளர் உரையாற்றுகையில், வளம்நிறைந்த எமது தேசத்தை பொருண்மியபலம் நிறைந்ததாகக் கட்டி எழுப்ப வேண்டும் எனவும் ஏற்கனவே தமிழீழத்தின் வளங்கள் பல பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் இனம் காணப்பட்டுள்ளதாகவும் வளங்களை உச்சமாகப் பயன்படுத்தப் பல திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளதாகவும் பல முன்னோடித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வெற்றியளித்திருப்பதாகவும் குறிப்பிட்டதுடன் இதன் மூலம் பெருமளவு வேலைவாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் கடல் வளம் ஒரு பெரிய வளம் எனவும் இது முழுமையாக பயன்படுத்தப்படவில்லை என கூறியதுடன் தமிழ் சமூகத்தில் ஒரு குறிப்பிட்டசிறுஎண்ணிக்கையானோருக்கு மட்டுமே பயன்பட்டு வந்த எமது பல்கலைக்கழகம் இன்று எல்லோருக்கும் பயன்படக்கூடியதாக திறந்துவிடப்பட்டுள்ளது பாராட்டுக்குரியது எனவும் கடல்வள பயிற்சியை பெற்றுள்ளவர்களை சங்கங்களுடனும் மக்களுடனும் இணைந்துகடல்வளத்தின் உச்சப்பயன்பாட்டிற்கு கூடிய பங்காற்ற வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

அதனைத் தொடர்ந்து கலைப்பீடாதிபதி பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை மற்றும் பயிற்சி பெற்ற மாணவர்கள் ஆகியோரும் உரையாற்றினர்.

---

# கிரிக்கட் சபைக்கு காமினி மீண்டும் தலைவர்

(கொழும்பு)

இலங்கைக் கிரிக்கட் கட்டுப்பாட்டுச் சபைத்தலைவர் பதவிக்கு மீண்டும் காமினி திசாநாயக்கா செய்யப்பட இருப்பதாகதெரியவருகின்றது ஜே.ஆர் ஜெயவர்த்தனாஜனாதிபதியாக இருந்த காலத்தில் இவர் அமைச்சராக இருந்த போதும்மேற்படி சபைக்கு தலைவராக இருந்தார் அதன் பின்னர் இப்பதவியை விட்டு விலகினார் என்பதும்குறிப்பிடத்தக்கது.

தற்போது அடுத்த மாதம் நடைபெறவுள்ள கிரிக்கட் கட்டுப்பாட்டுச் சபைத் தேர்தலில் தலைமைப்பதவிக்கு போட்டியிடுவார் என்றும் இவரை எதிர்த்து ஒருவரும் போட்டியிடமாட்டார்கள் எனவும் கூறப்படுகிறது.

---

# கலப்படமற்ற பொய்களே கருணாநிதி கூறுவது

## ஜெயலலிதா சொல்கிறார்

கருணாநிதி கூறுவது அனைத்தும் கலப்பட மற்ற பொய்யே அன்றி வேறில்லை என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா கூறியுள்ளார்: சென்னைக்கு குடிநீர்கொண்டு வரும் கிருஷ்ணா நதிநீர் திட்டத்தை தமது அரசு புறக்கணித்தது என்பதை தமிழக அரசு நிரூபித்தால் தான் அரசிலிருந்து விலகத் தயார் ஆனால், அவ்வாறு நிரூபிக்காதுவிட்டால்ஜெயலலிதா அரசியலிருந்து விலகுவாரா என தி.மு.க தலைவர் சவால் விட்டிருந்தது தெரிந்ததே

---

# மக்கள் பிரிவுபசாரம்

(யாழ்ப்பாணம்)

கடந்த ஒன்றரை வருடகாலமாக சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் யாழ்- வதிவிடப் பிரதிநிதியாக கடமையாற்றி விலகிச் செல்லும் திரு. ஜோன் அவர்களுக்கு மேற்படி நிதியத்தினால் பராமரிக்கப்பட்டு வரும் யாழ்-புகையிரதநிலைய முகாம் (ஸ்ரீபன் குடியிருப்பு) அரியாலைசாம்சன்குடியிருப்பு ஆகியவற்றைச் சேர்ந்த தீவக மக்கள் பிரிவுபசார வைபவங்களை நடாத்தியுள்ளனர். கடந்த 23-ம் திகதி திங்கள் ஸ்ரீபன் குடியிருப்பு மக்களும், 25-ம் திகதி புதன் சாம்சன் குடியிருப்பு மக்களும் நடாத்திய இவ்வைபவங்களில் திரு. ஜோன் அவர்களுக்கு மக்கள் தமது அன்பளிப்புப் பொருட்களை வழங்கி விடைகொடுத்தனர்.

---

(பருத்தித்துறை)

''மர நடுகைத் திட்டங்களிலே மாணவர்களை ஈடுபடுத்திஊக்குவிப்பதன்மூலமே மரநடுகைத் திட்டங்கள்மூலம் எதிர்பார்க்கும் வெற்றிகளைப் பெற்றுக்கொள்ளமுடியும். இதனைக் கருத்திற்கொண்டே தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மர நடுகைத் திட்டங்களிலே மாணவர்களை ஈடுபடுத்தி ஊக்குவித்து வருகின்றது மர நடுகைப் போட்டித் திட்டங்களிலே வெற்றியீட்டும் பாடசாலைகளுக்கும், மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்படும் போதுபாடசாலைகள், மாணவர்கள் நன்மைகளைப்பெற்றுக் கொள்வதுடன் மர நடுகைத் திட்டங்களையும் வெற்றி பெறச்செய்யமுடியும்''

இவ்வாறு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் வடமராட்சிப் பாடசாலைகளுக்கிடையே நடாத்திய மரநடுகைப் போட்டித் திட்ட ஓராண்டு நிறைவு விழாவிலும் பரிசளிப்பு விழாவிலும் உரையாற்றிய தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பொறுப்பாளர் திரு. சி. ரவி குறிப்பிட்டார். பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரி மண்டபத்தில் யாழ் வடக்கு (வலயம் 2) கல்விப் பணிப்பாளர் திரு. க. கந்தசாமி தலைமையில் விழா நடைபெற்றது.

தொடர்ந்து உரையாற்றிய தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பொறுப்பாளர் திரு ரவி குறிப்பிட்டதாவது,

இன்று பல்வேறு தேவைகளுக்காக மரங்கள் நாள்தோறும் வெட்டப்பட்டுவருகின்றன- ஆனால் வெட்டப்படும் மரங்களை ஈடுசெய்வதற்காக மரங்களை நாட்டும் நடவடிக்கைகளில்ஈடுபடுவோர் மிகக் குறைவாகவே உள்ளனர் எனவே மரங்களை நாட்டும் நடவடிக்கைகளை ஊக்குவிக்க வேண்டியது மிக முக்கியமாகவுள்ளது. மரங்கள் அழிக்கப்படுவதனால் வரட்சி ஏற்படும்

யாழ் குடாநாடு வெகுவிரைவில் பாலைவனமாக மாறக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாக ஆய்வாளர்கள் அறிவித்திருப்பது பெரும் அச்சத்திற்குரியதும் அபாயத்திற்குரியதாகும்எனவே மரம்நாட்டும்இயக்கங்களை நாம் பெரிய அளவில் மேற்கொள்ளவேண்டும் மரங்களை நாட்டிவிட்டால் மட்டும் போதாது அவைகளைப் பாதுகாத்துப்பராமரிக்கவும் வேண்டும்

மாணவர்களுக்கு மரங்களை நாட்டுவதன் முக்கியத்துவத்தினை விளக்கி அதனால் நாட்டிற்கு எதிர்காலத்தில்ஏற்படும் நன்மைகளையும் தெரிவித்து அவர்களை மரம்நாட்டும் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தும் போது நாம் மரங்களைநாட்ட எதிர்பார்க்கும் இலக்கை அடையமுடியும்

வடமராட்சிப் பகுதி மாணவர்கள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் இம்மரநடுகைப் போட்டித் திட்டத்திலே மிக உற்சாகமாக கலந்துகொண்டு இத்திட்டத்தை ஊக்குவித்து வருவது மிக மகிழ்ச்சிக்குரியதாகும் என்றார்.

பருத்தித்துறை பிரதேச செயலர் திரு ஆ சிவசுவாமி, பருத்தித்துறை பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு வே தி செல்வரத்தினம், கரவெட்டி பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு சி சிவராசா கடற் புலிகள் மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வன் வைகரன், ஓய்வுபெற்ற உதவி விவசாயப் பணிப்பாளர் திரு பொன் மாணிக்கவாசகர், தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டுக் கழக வடமராட்சிப் பொறுப்பாளர் திரு வளவன் ஆகியோர் சிறப்புவிருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்

வடமராட்சிக் கால்நடை வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி பொ இராமநாதன் மரநடுகைப் போட்டித் திட்ட ஓராண்டு நிறைவு பற்றிய மதிப்பீட்டுரையை நிகழ்த்தினார் வடமராட்சி கிழக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழக இணைப்பாளர் திரு சி பிரபாகரன் நன்றியுரை நிகழ்த்தினார் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன

யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

# தேர்தலில் போட்டியிட டி. பியின் உயர் மட்டக்குழு சிபார்சு தேவை

(கொழும்பு)

டி. பி. விஜேதுங்காவினல் நியமிக்கப்பட்டுள்ள உயர் மட்டக் குழுவினால் சிபார்சு செய்யப்படும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மட்டுமே அடுத்த தேர்தலில் போட்டியிடுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும்எனக் கூறப்படுகிறது. இதற்காக தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர்களின் வேலைத்திறன் மற்றும் தொகுதியில் அவர்களுக்குள்ள செல்வாக்கு என்பன பற்றி மதிப்பீடு செய்யப்படுவதாகவும் கூறப்படுகிறது.

இந்த உயர் மட்டக் குழுவினால் சிபார்சு செய்யப்படும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமே எதிர்காலத் தேர்தல்களின் போது ஐ தே க வின் நியமனம் பெறுவர் என்றும் தெரியவருகிறது.

ஐ.தே.கவின் தற்போதைய தலைமையின் போக்கு தொடர்பாக விமர்சனம் தெரிவிக்கும் சிலருக்கு ஐ தே. க. டிக்கட் கிடைக்கும் சாத்தியம்இல்லை எனவும் கூறப்படுகிறது.

இதே வேளை ஐ. தே. க. தலைமைப் பீடமான சிறிகோத்தாவில் இருந்து கிடைக்கும் தகவல்களின்படி தற்போதையபொதுச்செயலாளரான காமினி விஜேசேகரா தற்போது தொகுதிகளுக்கு விஜயம் செய்து பாராளுமன்ற உறுப்பினர்களின் செல்வாக்கு குறித்து மதிப்பீடு செய்யும் பணியை தொடங்கியுள்ளார்.

தென் மாகாணத்தில் இத்தகைய சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டுள்ள காமினி விஜேசேகரா விரைவில் மத்தியமாகாணத்துக்கும் சுற்றுப் பயணம் செய்யவுள்ளார்.

# இந்திய நீர்மூழ்கி வெள்ளோட்டம்

(டில்லி)

இந்தியாவின் சொந்த தொழில் நுட்ப முயற்சியில் இரண்டாவது நீர்மூழ்கிக் கப்பல் கட்டப்பட்டுள்ளது.

ஐ. என் எஸ். சங்கு எனப்படும் இந்த நீர்மூழ்கிக் கப்பல் நேற்று பம்பாய் அருகே வெள்ளோட்டத்தில் விடப்பட்டது

## கண்டெடுப்பு

யேசுராஜா சகாயநாயகி என்பவரது அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு எமது அலுவலகத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. உரியவர் பெற்றுக்கொள்ளவும்.

துன்னாலை அ. த. க பாடசாலை

# பெண்ணிடம் கறக்கும் சீதனம் முதுகெலும்பற்றவனுக்கு மூலதனம்

## நிராகரிப்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் மறைவு குறித்து மீண்டும் விசாரிக்கப்பட வேண்டும் என்று அவரதுமகள் திருமதி துலாஞ்சலி ஜெயக்கொடிவிடுத்தவேண்டுகோளை சிறிலங்காஅரசு நேற்றுமுறைப்படி நிராகரித்துள்ளது.

இது தொடர்பாக ஜனாதிபதியின் செயலாளர் கே. எச். ஜே. விஜேதாச மேலும் கூறுகையில் பொலிசாரின் விசாரணைகளிலிருந்து இக்கொலையில் விடுதலைப் புலிகள் சம்பந்தப்பட்டிருப்பது உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

## அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்;

# பால் உற்பத்தி தொடர்பான நடவடிக்கை விஸ்தரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறச் சங்கம் தனது நடவடிக்கைகளை விஸ்தரிக்கவுள்ளது

பால் உற்பத்தியை அடிப்படையாக வைத்து இச் சங்கம் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளை மேலும் விஸ்தரிப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாதாந்தம் சுமார் 40,000 லீற்றர் பாலை இச் சங்கம் கொள்வனவு செய்து விற்பனை செய்து வருகிறது. இத் தொகையை மேலும் அதிகரிப்பதற்கு தற்போது திட்டமிடப்பட்டிருக்கிறது. மேலதிகமாக உற்பத்திசெய்யப்படும் பாலை குளிரூட்டிப் பாதுகாத்து விற்பனை செய்வதற்கு வசதியாக கொழும்பில் இருந்து மின் பிறப்பாக்கி ஒன்றை எடுத்துவருவதற்கு தாம் நடவடிக்கை எடுத்திருப்பதாக இச் சங்கத்தின் தலைவர் திரு சிவபாலன் தெரிவித்தார்

மேலும் பால் உற்பத்தியாளர்களுக்குரிய பணவைப்புத் திட்டம் ஒன்றையும் தாம் அறிமுகப்படுத்தியிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்

# மதுபோதையில் வழக்காளி; குற்றப்பணம் அறவீடு

(தென்மராட்சி)

எழுதுமட்டுவாழ் பகுதியைச் சேர்ந்த ஒருநபர் அதே இடத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் தனக்கு அடித்து காயம் விளைவித்தார் என காவல் துறையினரிடம் முறையிட்டதைத்தொடர்ந்து காவல் துறையினர் சந்தேக நபரை சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

வழக்கு ஆரம்பித்த தினமே வழக்காளி மதுபோதையில் மன்றில் சாட்சியம் அளிக்க முற்பட்டார் எனவே மன்று, இவர் மதுபோதையில் மன்றுக்கு வந்ததினால் குற்றப்பணமாக 2000 ரூபா கட்டும்படியும், எதிராளி பக்கத்திற்கு அன்றைய தினம் வழக்குச் செலவினையும் கட்டும்படியும் தீர்ப்புவழங்கியதோடு, வழக்கு விசாரணையும் ஒத்தி வைக்கப்பட்டது. (86)

# மரநடுகை போட்டியில் முதலிடம் பெற்றது

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால வடமராட்சிப் பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்ட மரநடுகைப் போட்டித் திட்ட ஓராண்டு போட்டிகளிலே துன்னாலை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை முதலாவது இடத்தைத்தட்டி 10,000 ரூபாவைப் பரிசாகப் பெற்றுக்கொண்டது. கட்டைவேலி அரசினர்தமிழ்க்கலவன் பாடசாலை இரண்டாவது இடத்தைப்பெற்று 5,000 ரூபாவையும், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் தரக்கல்லூரி மூன்றாவது இடத்தைப் பெற்று 2, 500 ரூபாவையும் பரிசாகப் பெற்றுக்கொண்டன.

மாணவர்களுக்கிடையே நடாத்தப்பட்ட போட்டியில் கரணவாய் பொன்னம்பல வித்தியாலய மாணவன் செல்வன் ம மதிக்குமார் 1ம் இடத்தைத்தட்டி 5,000ரூபா பணத்தையும் கேடயத்தையும் பெற்றுக்கொண்டார் நாகர் கோவில் மகாவித்தியாலய மாணவன் செல்வன் சி. சிவரஞ்சன் 2ம் இடத்தைப் பெற்று 2, 500ரூபா பணத்தையும் கேடயத்தையும்,நெல்லியடிமத்திய மகாவித்தியாலய மாணவன். செல்வன் ஆ. றூபகாந்தன் 3ம் இடத்தைப் பெற்று 1250 ரூபாபணத்தையும் கேடயத்தையும் பெற்றுக்கொண்டனர்.பரிசுப்பணங்கள் யாவும் வங்கி சேமிப்பு புத்தகங்களாகவழங்கப்பட்டன இம்மரம் நடுகைப் போட்டிகளிலே கலந்து கொண்ட 168 மாணவர்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (25)

## 90பேர் திரும்பினர்

மோதல்கள் இடம்பெற்று வரும் யேமனில் இருந்து தொண்ணூறு இலங்கையர்கள் பாதுகாப்பாகவெளியே அழைத்து வர வெளிவிவகார அமைச்சு உதவியுள்ளது மேலும் 18 பேர் யேமன் தலைநகரமான சானாவிலிருந்து பம்பாய் வந்துள்ளனர் இதற்கு முன்பு மேலும் 82பேர் கொழும்புக்கு வந்து சேர்ந்தனர்.

# குடும்பத்திற்கு 4 லீற்றர் மண்ணெய் கிடைக்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திற்கு யூன் மாதத்திற்கு சிறிலங்கா அரசினால் ஒதுக்கப்பட்ட மண்ணெண்ணெய் வந்து சேர்ந்ததும் ஒரு குடும்பத்திற்கு நான்கு லீற்றர் வீதம் விநியோகிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

சிறிலங்கா அரசாங்கம் யாழ் மாவட்டத்திற்கு சுமார் 7000 பரல் மண்ணெண்ணெயை யூன் மாதத்திலிருந்து மாதந்தோறும் அனுப்புவதற்கு தீர்மானித்துள்ளதாக யாழ் செயலக புனர்வாழ்வுப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்

இதற்குமுன்னர் சுமார் 3500 தொடக்கம் 4000வரையான மண்ணெண்ணெய் பரல்களே சிறிலங்கா அரசு யாழ் மாவட்டத்திற்கு வழங்கியிருந்தமை தெரிந்ததே

# நம்பிக்கை மோசடிக்கு அபராதம் விதிப்பு

## பருத்தித்துறை நீதிமன்று தீர்ப்பு

எண்ணாயிரம் ரூபா பெறுமதியான துவிச்சக்கரவண்டியை ஒருவரிடம் இருந்து வாங்கி நம்பிக்கை மோசடி செய்தவருக்கு பருத்தித்துறை தமிழீழ நீதிமன்றம் குற்றப் பணமாக ஐயாயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

நம்பிக்கை மோசடி செய்தவரை வண்ணாங்கேணியைச் சேர்ந்த மகாதேவன் தேவராசா என்பவரை வல்வெட்டித்துறை காவல்துறையினர் பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர் செய்தனர்

பருத்தித்துறை தமிழீழ நீதிமன்ற நீதியாளர் பிரதீபா அந் நபரிடம் மேற்படி குற்றப் பணம் செலுத்துமாறு உத்தரவிட்டார். [யோ]

## போஷாக்கு வார நாடகப் போட்டி

(சங்கானை)

வலி மேற்கு சங்கானைப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த பொது ஸ்தாபனங்களுக்கிடையேயான போஷாக்கு வார நாடகப் போட்டி ஒன்று இன்று காலை 9 மணியளவில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் வலி மேற்கு உதவி அரசாங்க அதிபரும் பிரதேச செயலருமான திரு. சா, சந்திரராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

# நாய்களுக்கு தடுப்பூசி; ஜூனில் ஆரம்பமாகும்

இந்த வருடத்திற்கான நாய்களுக்கு தடுப்பூசி போடும் வேலைகள் எதிர்வரும் ஜூன் முதலாம் திகதி புதன்கிழமை முதல் மீண்டும் ஆரம்பிக்கப் படவுள்ளது. சனசமூக நிலையங்களிலும் ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் பகுதி பகுதியாக மாநகர சபையின் அனுமதிப்பத்திரம் பெற்ற வளர்ப்பு நாய்களுக்கு இலவசமாக இவ் விசர்நாய்த் தடுப்பூசி போடப்படவுள்ளது

வீட்டு நாய்களை மாநகர சபை அலுவலகத்தில் ரூபா 7-50 செலுத்தி இலக்கத்தகடும், பத்திரமும் வளர்ப்பு நாயின் உரிமையாளர் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும், ஊசி போடப்படும் நேரம் இடம் என்பன பற்றி சுகாதார அலுவலகத்தில் அல்லது வெளிக்கள சுகாதார ஊழியர்களிடமிருந்து தெரிந்து கொள்ளலாமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## போதைப்பொருள் வைத்திருந்த

# இலங்கைத் தமிழருக்கு 10 வருடச்சிறைத்தண்டனை

(சென்னை)

திருச்சியிலுள்ள இலங்கைத் தமிழ் அகதி ஒருவர் 41,000 ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப்பொருள் வைத்திருந்தமைக்காக பத்து வருட சிறைத்தண்டனை விதிக்கப் பட்டுள்ளது. அத்துடன் ஒரு லட்சம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது

யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த குணசேகரன் அல்லது அப்பு என்பவரே இவ்வாறு தண்டனை பெற்றவராவார்.

# ஊழலில் ஜெயலலிதா கின்னஸ் சாதனை

## மு. கருணாநிதி தெரிவிப்பு

(சென்னை)

ஊழல் செய்வதில் ஜெயலலிதாவின் அரசு கின்னஸ் சாதனையை எட்டியிருப்பதாக தி. மு க தலைவர் மு கருணாநிதி கூறியுள்ளார்

அவர் மேலும் இந்த ஆட்சியைக் கலைக்க வேண்டும் என்று நாம் மகஜர் கொடுக்க மாட்டோம். பதிலுக்கு இந்த ஆட்சிக்கு முடிவுகட்ட மக்களுக்குதான் அழைப்புவிடுப்போம் எனவும் தெரிவித்தார்.

அத்துடன் இந்த ஆட்சியில் தான் அரச போக்குவரத்து என அனைத்திற்கும் ஜெயலலிதா பெயர் சூட்டப் பட்டுள்ளது. பே கிற போக்கைப் பார்த்தால் தமிழ்நாடு விரைவில் ஜெ நாடாகிவிடும் போல் இருக்கிறது எனவும் தெரிவித்தார்.

## 'ஐக்கியதீபம்' வெளியீடு

(யாழ்ப்பாணம்)

கூட்டுறவுத் துறையின் ''ஐக்கிய திபம்'' மே மாத வெளியீடு நேற்று வேலணை ப.நோ கூ. சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் தலைவர் பொ. மாசிலாமணி அவர்களின் தலைமையில் நடைபெற்ற வெளியீட்டுவிழாவில் வெளியிடப்பட்டது. (88)

# சிமெந்து உற்பத்தி வெற்றி தந்துள்ளது

விசுவமடுவில் அமைந்துள்ள ... தயாரிக்கப்பட்டுவரும் ஒடுக...

# ஆசிய அபிவிருத்தி வங்கி 375 கோடி வழங்கும்

சுய தொழில் அபிவிருத்திக்கு என ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கைக்கு முந்நூற்றி எழுபத்திஐந்து கோடி ரூபாவை வழங்க முன்வந்துள் ... உதவும் நோக்குடன் இக் கடன் வழங்கப்பட இருப்பதாகவும் இவைகள் அநேகமாக அரசாங்க பிராந்திய வங்கிகளூடாகவேவழங்கப்படுமென ...

## வரைவிட்ட

... சின் செயலாளர்களே மேற்கொள்வதால் அவர்கள் விண்ணப்பிக் வேண்டியதில்லை என மாகாணசபை வெளியீட்...

# நிவாரண விநியோகத்தில் சங்கங்களுக்குள் வேறுபாடு

இடம் பெயர்ந்தோருக்கான இலவச நிவாரண விநியோகத்தில் யாழ். மாவட்ட கூட்டுறவுச் சங்கங்கள் முரண்பட்ட முறையில் செயற்பட்டு வருகின்றன- இதனால் இடம் பெயர்ந்தோர் பெரும் சிரமங் ... தை வழங்கும் போது இச் சங்கங்கள் மட்டும் புதிய முத்திரை கிடைத்ததுமே தாம் நிவாரண விநியோகத்தை மேற்கொள்வோம் என உறுதிபடக் கூறுகின்றனராம்.

நிவாரணமுத்திரைகள் செய...

## வெற்றி தந்துள்ளது

விசுவமடுவில் அமைந்துள்ள ஆலையில் உள்ளூர் வளங்களான ஊவக்கோல், இலுக்புல், முதலியவற்றைப் பயன்படுத்தி, சிப்போட் தயாரிக்க வன்னிப்பகுதியில் கைத்தொழில் பகுதியினர் எடுத்த முயற்சி பெரும் வெற்றியாக முடிந்துள்ளது. இங்கு 3' X3' அளவில் சிப்போட்கள் தயாரிக்கப்படுகின்றன.

கடந்த மேதினத்தன்று தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன ஊர்தியின் அங்கமாக அமைந்த வீடு இச் சிப்போட்களால் ஆக்கப்பட்டு, ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலையில் தற்போது தயாரிக்கப்பட்டுவரும் ஓடுகளால் வேயப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

இச் சிப்போட்களின் தரத்தை மேலும் மேம்படுத்துவதற்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கைத்தொழிற் பகுதியினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். தற்போது இவை கிளிநொச்சியில் விற்பனைக்கு விடப்பட்டுள்ளன வெகுவிரைவில் குடாநாட்டிலும் இவை விற்பனைக்கு விடப்பட்டிருக்கின்றது எனக் கைத்தொழில் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

---

வங்கி இலங்கைக்கு முந்நூற்றி எழுபத்திஐந்து கோடி ரூபாவை வழங்க முன்வந்துள்ளது.

சுயதொழில் அபிவிருத்திக்கு ...

கவும் இவைகள் அநேகமாக அரசாங்க பிராந்திய வங்கிகளூடாகவேவழங்கப்படுமெனவும் மேலும் தெரிய வருகின்றது

## பேராதனை பல்கலை. விரிவுரைகள் ஆரம்பம்

பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரைகள் யாவும் மீண்டும் திங்கட்கிழமையன்று ஆரம்பமாகும் எனவும், விடுதிகளில் தங்கியுள்ள மாணவர்கள் நாளை மாலை ஐந்து மணிக்கு முன்பாக சமுகமளிக்க வேண்டும் எனவும், பிற்போடப்பட்ட பரீட்சைகள் ஜூன் 15-ம் திகதிக்குப் பின் நடத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பல்கலைக்கழக மாணவர்களின் விடுதி வசதிக்கென மூன்று கட்டடங்களை பல்கலைக்கழக நிர்வாகம் வாடகைக்கு பெற்றுக் கொண்டுள்ளது.

---

சின் செயலாளர்களே மேற்கொள்வதால் அவர்கள் விண்ணப்பிக்க வேண்டியதில்லை என மாகாணசபை வெளியிட்டுள்ள சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த காலங்களில் வெளியிடப்பட்ட சுற்று நிருபங்களுக்கு அமைவாக ஏற்கனவே விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள அமைய ஊழியர்கள் மீண்டும் ஒருமுறை விண்ணப்பிக்க வேண்டிய அவசியமில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது

---

வுச் சங்கங்கள் முரண்பட்ட முறையில் செயற்பட்டு வருகின்றன. இதனால் இடம்பெயர்ந்தோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

தீவகப் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து யாழ். நகரில் இயங்கி வரும் புங்குடுதீவு மற்றும் நயினாதீவு சங்கங்கள் சித்திரை மாதத்திற்குரிய நான்கு கட்ட இலவச நிவாரணப் பொருள்களையும் தற்போது விநியோகிக்கத் தொடங்கியுள்ளனர்.

ஆனால் ஊர்காவற்றுறை, வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இதுவரை தமது விநியோகத்தை ஆரம்பிக்காததினால் இடம்பெயர்ந்த மேற்படி சங்கங்களின் அங்கத்தவரான மக்கள் பட்டினியை எதிர்நோக்கியுள்ளதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

புங்குடுதீவு சங்கம் பழைய முத்திரை அடிக்கட்டையை பெற்றுக்கொண்டு நிவாரணத்தம் நிவாரண விநியோகத்தை மேற்கொள்வோம் என உறுதிபடக் கூறுகின்றனராம்.

நிவாரணமுத்திரைகள் செயலகத்திற்கு எடுத்து வரப்பட்டுள்ள போதிலும் அவை கணக்கிடப்பட்டு பிரதேச செயலகர்களுக்கு அனுப்பப்பட்டு அவர்களூடாக கிராம சேவகருக்கு வழங்கப்படவுள்ளது.

இவ்வாறுவழங்குவதற்கு மேலும் பத்து நாட்கள் வரை செல்லும் என்பதால் தமக்குரிய பொருட்களை ஏனைய சங்கங்கள் வழங்கும் முறையைப் பின்பற்றி இச்சங்கங்களும் வழங்க வேண்டும் என தீவக மக்கள் சங்கத்தலைவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்

---

## மாணவர் எழுச்சி நாள்
## யூன் - 5

குப்பி விளக்கிலும் குனிந்து படிப்போம்
கப்பும் இருளிலும் துணிந்து நடப்போம்.

இடம்: யா/இராமநாதன் கல்லூரி மண்டபம்
காலம்: 1994 - 6 - 5
நேரம்: பிற்பகல் 3. 00 மணி

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

மாணவர்கள், ஆசிரியர்கள்,
அதிபர்கள், அலுவலர்கள்.
உடுவில் கல்விக் கோட்டம்.

(சி- 9545)

---

### சந்திரிகா

மிகவும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. இதனை முடிவிற்குக் கொண்டு வருவதற்கு தற்போதைய அரசியல் தலைவர்கள் எவருமே திராணி அற்றவராகவேயுள்ளனர்

இதனல் இவற்றைக் கருத்தில் கொண்டு சந்திரிகாவை ஜனாதிபதியாக்குவதன் மூலம் இனப்பிரச்சினைக்கு சுமுகமான ஒரு தீர்வை எட்ட முடியும் என அவர்கள்மேலும் தெரிவித்துள்ளனர்.

---

### கமக்காரர்

கள் விவசாய உள்ளீடுகளை சிரமமின்றி பெற்று விவசாயத்தில் ஈடுபட செய்வதற்காகவே இவ் அட்டை அறிமுகப்படுத்தப்பட்டது இதுவரை காலமும் யாழ் மாவட்டத்தில் 25,000 விவசாயிகளே அறிமுக அட்டையினை பெற்றுள்ளார்கள் ஏனைய விவசாயிகளும் இவ் அட்டையை விரைவில் பெற்று உள்ளீடு வழங்கலில் ஈடுபடும் சிரமத்தைத் தவிர்த்துக்கொள்ளுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கேட்டுக் கொள்கின்றது.

---

## சங்கீதம் செய்முறை பரீட்சை

(யாழ்ப்பாணம்)

க.பொ.த. சாதாரண பரீட்சையின் சங்கீத பாடத்திற்கான செய்முறைப் பரீட்சை எதிர் வரும் முதலாம் திகதி முதல் பத்தாம் திகதி வரை இடம்பெறவுள்ளது க. பொ. த. சாதாரண பரீட்சையின் சங்கீத பாட அறிமுறைப் பரீட்சையில் தகுதிபெற்ற மாணவர்கள் இப் பரீட்சையில் தோற்றவுள்ளனர்.

பாடசாலைப் பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் கோட்டக் கல்வி அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான அட்டைகள் தபாலில் சேர்க்கப்பட்டுள்ளன இத் தகவல்களை யாழ்ப்பாண கல்வி வலயம் இரண்டின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் வெளியிட்ட செய்திக் குறிப்பின் மூலம் தெரியவருகின்றது

---

### எமது

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிதான் அவரின் குடும்பத்திற் குஇல்லை எனவும் அவர் தெரிவித்தார்

அரசியல் தலைவர் மறைந்தால் அவரின் அரசியல் இலக்கு கொள்கைகளை முன்னெடுத்து செல்லவேண்டியது அவரின் கட்சி தவிர குடும்பத்தினர் அல்ல குடும்பத்தினருக்கு மறைவின் பின் கிடைக்க வேண்டியது சொத்துக்கள் மட்டுமே எனவும் அவர் மேலும் தெரிவித்தார் அவர் மேலும் தெரிவிக்கையில் கட்சிக்குள் பல சிந்தனையுடையவர்கள் இருக்கலாம் அவர்களுக்கு பூரண சுதந்திரம் இருக்க வேண்டும். அவர்கள் விரும்பினால் எவருக்கும் அரசியல் ஒத்துழைப்பு வழங்கலாம் அவ்வாறு சிந்தனையுடையவர்கள் தாமாகவே விலகிக் கொள்ளலாம். அப்படி அவர்களாகவே விலகாவிட்டால் வெளியேற்றப்படவேண்டும். இதன் அடிப்படையிலே பலரைத் தற்போது வெளியேற்றிக் கொண்டு இருக்கின்றோப் இது கட்சியின் நலனுக்காகச் செய்யும் காரியம் என்றார்

நாம் எந்தக் கட்டத்திலும் பொது ஜன ஐக்கிய முன்னணியுடன் ஒப்பந்தம் எதனையும் செய்யவில்லை மாகாணசபை ஆட்சியைக் கைப்பற்ற நாம் ஒத்துழைப்பை அவர்களுக்கு வழங்கினோம் எனவும் தெரிவித்தார்

---

### சந்திரிகாவை

மக்கள் தயாராக இல்லை ஒரு பெரும் வெற்றியை சூடுவதற்கான ஒரு பலம் வாய்ந்தவேட்பாளர் இருக்கும்போது ஏன் அவர் நியமிக்கப்படவில்லை என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது இந்த மககளின் எதிர்ப்புக்கு மத்தியில் தொடர்ந்து சுதந்திர கட்சி முன்னோக்கி செல்வது கடினமாக அமையும். இதனை சமாளிக்கும் வகையில் சுதந்திர கட்சியினர் சந்திரிகா குமாரணதுங்கா தனது பாதுகாப்புக்காகவே வேட்பாளர் என தெரிவு செய்யப்படவில்லை என்று தெரிவித்து வருவதாக தெரிவித்துள்ளார்

சந்திரிகாவின் உயிர் பாதுகாப்புக்கே சிறிமாவோ ஜனாதிபதி வேட்பாளராக தெரிவிக்கப்பட்ட போதும் இறுதி நேரத்தில் சந்திரிகாவை முன்வே கொண்டு வருவதற்கு கட்சி தீர்மானித்துள்ளது என கட்சி வட்டாரம் தெரிவிக்கின்றதாக மேலும் தெரிவித்துள்ளார்

---

## வெப்பக் காற்றால் 50 பேர் பலி

(டில்லி)

இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலத்தில் கோடை கால வெப்பக் காற்றின் காரணமாக இதுவரை ஐம்பதுக்கும் அதிகமானோர்பலியாகியிருப்பதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன

---

### குழந்தைகள்

சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 15 குழந்தைகள் மரணமடைந்ததாகவும், கோப்பாய் சுகதார வைத்திய அதிகாரி பிரிவில் 14 குழந்தைகள் மரணமடைந்ததாகவும் கண்டறியப்பட்டுள்ளது, அத்துடன் தெல்லிப்பழை, யாழ்ப்பாணம், பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் மொத்தம் 32 குழந்தைகளும் மரணமடைந்துள்ளன

சென்ற ஆண்டின் நான்கு காலாண்டுகளுடன் மாவட்ட ரீதியாக ஒப்பிடும்போது இது எண்ணிக்கை குறைவாகவே காணப்படுவதாகவும் எனினும் ஒரு சில சுகாதார அத்தியட்சகர் பிரிவுகளில் அதிகரித்து இருப்பதாகவும் தெரியவருகிறது.

---

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது